

ஆண்டறிக்கை
2019

தேசிய தொழில்சார் பாதுகாப்பு
மற்றும் சுகாதார நிறுவகம்

வருடாந்த அறிக்கை - 2019

தொகுப்பு:

சம்பிக்க அமரசிங்க, மொகான் பெரேரா, சன்துலி சுமனதேவா

வடிவமைப்பு - துசித்தா பெரேரா

வெளியீடு:

தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகத்தின் வெளியீட்டுக் குழு

தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகம்
இல. 97, ஜாவத்தை வீதி, கொழும்பு 05, இலங்கை
தொலைபேசி: + 94 11 2 585 425

அனைத்துப் பதிப்புரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளது
2021

ISBN 978-624-6017-00-2



தேசிய தொழில்சார் பாதுகாப்புமற்றும் சுகாதார நிறுவகப் பணிப்பாளர் அதிபதியின் செய்தி

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2011ஆம் ஆண்டில் அதன் செயற்பாட்டினை ஆரம்பித்திருந்தது.

இந்நிறுவகத்தின் இலக்கு, சுய நிதியிடல் அமைப்பொன்றாக இருக்கையில் தொழிற்றுறைக்கு உலகதரத்திலான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையொன்றினை வழங்குவதாகும். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவலை வழங்குவதில் முன்னணியில் இருக்கின்றது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது அது ஆரம்பிக்கப்பட்டு கடந்த சில ஆண்டுகளுக்குள் கருத்தரங்குகளை, பயிற்சியமர்வுகளை ஒழுங்கமைத்தல் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களைத் தகுதியுள்ளவர்களாக்குதல் போன்ற அத்தகைய பல்வேறு செயற்பாடுகளை ஆற்றுவதனூடாக தொழிற்றுறையினரிடையேயும், பொதுமக்களுக்கிடையிலும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்க முடிந்திருந்தது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அது 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலங்கையரின் தொழிலாற்றுகின்ற சூழலில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அவர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அறிவினையும், திறன்களையும் பகிர்ந்துகொள்வதற்கும், நாளதுவரைப்படுத்துவதற்கும் இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தொழில்சார் நிபுணர்களுக்கான முதல் அடித்தளமாக சேவையாற்றியுள்ளது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், அனைவருக்கும் பாதுகாப்பான, சுகாதாரமான வேலைத்தலம் என்பதனை அடைவதற்குரிய பொதுவான அபிலாசையை நோக்கிய ஒழுங்கமைப்பாளர்கள், செய்முறையாளர்கள், நிபுணர்கள், அராய்ச்சியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களை ஒன்றாகக் கொண்டுவருகின்றது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, விழிப்புணர்வினை அதிகரிப்பதனூடாகவும், உரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையையும் பின்பற்றுவதனூடாக அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பாக தொழில்புரிகின்ற வேலைச் சூழலை சீர்ப்படுத்தி, பேணி, நிரந்தரமானதாக்குவதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, எமது அனைத்து அக்கறைதாரர்களுக்கும் எப்போதும் மதிப்பளிப்பதுடன், தொழிற்றுறையின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் பாகுபாடற்ற, தொழில்நுணுக்க சேவைகளை வழங்குவதற்கும் உறுதிபூண்டுள்ளது. தொழில்நுணுக்கப் பயிற்சியை வழங்குவதில், விழிப்புணர்வினை உருவாக்குவதில், வியாபாரத்தை தொழிற்படுத்துகின்றவர்களின் நியதிகளின்படி உயர் மட்டத்திலான தொழில்சார் சுகாதார நலன் மற்றும் பாதுகாப்பான செய்முறைகள், தொழில்சார் நோய்களை மற்றும் தொழில்சார் விபத்துக்களைத் தடுத்தல் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார விளைவுகள் மீதான-தாக்கம், மாணவர்களுக்குத் தேவையான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பயிற்சிக்கான ஏற்பாடு, தொழில் புரிவதற்கான உடற்றகுதி சேவைகளை வழங்குதல் மற்றும் சுற்றுப்புறச் சூழலைக் கண்காணிக்கின்ற சேவைகளை வழங்குதல் போன்றவற்றில் நாம்

முன்னோடிகளாகத் திகழ்கின்றோம்.

எமது நிறுவகத்தினால் அளிக்கப்படுகின்ற பயிற்சிகள், வேலைத் தலங்களில் ஏனையவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் தொழில் புரிகையில் வேலையாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும். தமது வேலைத்தலங்களில் இருக்கின்ற குறிப்பிட்ட தீங்குகளை இனங்காண்பதற்கு தனிப்பட்டவர்களையும் இயலச் செய்கின்றது.

நாம், எமது சேவைகளை வழங்குவதற்கு சிறந்த விஞ்ஞானம்சார் செய்முறைகளை, சிறந்த விஞ்ஞான அறிவினையும் வளங்களையும் மட்டுமே பயன்படுத்துகின்றோம். எமது சேவைகளை வழங்குவதற்கு அனுபவம் வாய்ந்த சிறந்தத கைமையுள்ள நிபுணர்களைப் பணிக்கமர்த்துவதன் மூலம் எமது சேவைகளின் சிறந்த தரத்தை நாம் பேணுகின்றோம். நாம், இலங்கையரின் எதிர்கால தொழிற்றுறையினை நோக்கி சிறந்த தரமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை நாம் வழங்குகின்றோம்.

உள்நாட்டுத் தொழிற்றுறை, தொழில்தருநர்கள், பணியாளர்கள், சர்வதேச தொழில் தாபனங்கள், பல்கலைக்கழங்கள் மற்றும் உலக எண்ணக்கருத்துக்களுக்கமைவான தொழில்சார் சமூகத்துடன் பங்குடமையை ஏற்படுத்துவதில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஒரேயொரு அரசாங்க நிறுவகம் நாமாவோம். மேலும், நாம் தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுடனும் பணிபுரிவதுடன், **அனைத்து முத்தரப்பு ஆக்கக்கூறுகளுடன்** தொடர்பினைப் பேணுவதற்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

டாக்டர். என். சி. என். அமரதுங்க

பணிப்பாளர் அதிபதி

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம

பொருளடக்கம்

பணிப்பாளர் அதிபதியின் செய்தி	1 - 6
பொருளடக்கம்	2 - 3
அட்டவணைகளின் பட்டியல்	4 - 5
அத்தியாயம் 1 - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்	6
1.1 அறிமுகம	
1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள	
1.3 விசேட முன்னுரிமைகள்	
1.4 நிறுவகப் பணியாளரின் பதவிநிலைக் கட்டமைப்பு	
அத்தியாயம் 2 - நிறுவகத்தின் சேவைகள்	9
2.1 சேவை ஏற்பாடு	9
2.1.1 வழமையான செயற்பாடுகள்	9
அ. சூழல்சார் கண்காணிப்புகள்	10 - 12
ஆ. தொ.பா.சு இடர்களைமதிப்பிடுதல	13
இ. வேலைக்குப் பொருத்தமான தன்மை பற்றிய மதிப்பீடுகள	13
2.1.2 விசேட செயற்பாடுகள	12
அ. விசேடபயிற்சிகள	13
இ. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார திறமை விருதுகள் போட்டியும் வைபவமும்	13
ஈ. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு	13
உ. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்டஆய்வுச் செயற்பாடுகள	13
ஊ. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார தொழில் வல்லுநர் ஒன்றியம்	13
எ. CSR செயற்பாடுகள	14

2.1.3. சர்வதேச கூட்டிணைவுகள	14
2.2 சேவைத் தரத்தின் செம்மைப் படுத்தல்கள	14
2.2.1 சேவைத் தரத்தைச் சான்றுப்படுத்தும் முறைமைகள்	14
2.2.2. நிறுவனம்சார் உட்கட்டமைப்பு விருத்திகள்	15 - 31
அத்தியாயம் 3 - நிறுவனம்சார் முன்னேற்றங்கள	32 - 33
அத்தியாயம் 4 - விசேட சாதனைகள்	33 - 34
அத்தியாயம் 5 - சவால்கள	35 - 36

அட்டவணைகளின் பட்டியல்

அட்டவணை 5.1: நிதி பகுப்பாய்வு 2018 - 2019	32

உருவங்களின் பட்டியல்

உருவம் 3.1 வழக்கமான செயற்பாடுகள்	16
உருவம் 3.2 டிப்ளோமாதாரிகளின் முன்னேற்றம் 2012-2019	18
உருவம் 3.3 சான்றிதழ் பெற்றுக்கொண்டோரின் முன்னேற்றம் 2012-2019	18

படங்களின் பட்டியல்

படம் 3.1 தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான சிறப்பு விருது 2019	25
படம் 3.2 தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான மாநாடு 2019	27
படம் 3.3 தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான பட்டமளிப்பு விழா	28
படம் 3.4 தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான ஒன்றுகூடல்	30
படம் 3.5 தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் மற்றும் அரங்கம்	33

வரைப்படங்கள்

வரைபடம் 2.1 பாடநெறி கட்டமைப்பு	10

தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான சிறப்பு விருது விழா 2019	20
தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான சிறப்பு விருது மாநாடு 2019	20
தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான வாரம் 2019	22
தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான பட்டமளிப்பு 2019	24
தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான ஒன்றுகூடல் 2019	25
தேசிய பாதுகாப்பு தொழில்முறை சங்கம்	27
குறிப்பிடத்தக்க அடைவுகள்	30

முதலாவது அத்தியாயம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

1.1 அறிமுகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆசாரத்தை விருத்திசெய்கின்ற குறிக்கோளுடன், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சில் கொள்கையை உருவாக்குகின்ற நிறுவனமாக 2005 ஏப்பிரல் மாதத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. இந்நிறுவகத்தின் பொறுப்பாணை, நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் விழிப்புணர்வினை உருவாக்குதல், பயிற்சியளித்தல் மற்றும் அதன் மீதான ஆய்வுகளை மேற்கொள்வதாகும். தற்போது, தொழில்சார் அமைப்பொன்றாக இயங்கி வேலைத்தல சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்துள்ளது. தகவல் வழங்குதல், பயிற்சியளித்தல், கல்வி ஆராய்ச்சி, ஆய்வுகள், தீர்வுகள் மற்றும் வேலையாற்றுகின்ற சூழல்களில் வளமான பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துகின்ற முகாமைத்துவ முறைமைகள் என்பவற்றினூடாக இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் மொத்த பௌதீக, உள மற்றும் சமூக நலநன மேம்படுத்துவதற்கான தேவையை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையின் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட நியதிச்சட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ள தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இடர்களை மதிப்பிடுவதில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கு வலுவளிப்பதுடன், அவர்களது பணியாளர்களதும், ஏதேனும் தாபனங்களில் இருக்கின்ற அக்கறைதாரர்களது சுகாதாரப் பாதுகாப்பையும், சேமநலனையும் செம்மைப்படுத்துவதில் உலக தரத்திலான தீர்வுகளையும் நடைமுறைப்படுத்துகின்றது.

எந்தவொரு நாட்டினதும் நிலையான பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்புகின்ற சக்தி ஆரோக்கியமான தொழிலணியே என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அத்துடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இலங்கை முழுவதும் பாதுகாப்பான ஆசாரமொன்றை உருவாக்கி, பாதுகாப்பாக, ஆரோக்கியமாக வேலையாற்றும் சூழலிலிருந்து பணியாற்றுவதற்கு தனிப்பட்டவர்களது அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்துவதுடன், தொழிலுடன் தொடர்புபட்ட நோய்களையும் தடுக்கின்றது.

வேலை வாழ்க்கையின் சமநிலையை அனைத்துப் பணியாளர்களும் பேணுவது மிகவும் முக்கியமானதாகும். ஆனால் வேலை அழுத்தம் ஒருவரின் வாழ்க்கையிலும் ஒட்டுமொத்தச் சமூகத்திற்கும் பாதகமான விளைவினத் தருகின்றது. பணியாளர்களிடையே சிறந்த வேலை நிபந்தனைகளின்மை, சிறந்த செய்முறைகளின்மை, பாதுகாப்பற்ற பழக்க வழக்கங்கள் மற்றும் பாதுகாப்பற்ற செயல்கள் காரணமாக வேலையுடன் தொடர்புபட்ட விபத்துக்கள் மற்றும் நோய்கள் அதிகரிக்கின்றன. இந்தக் காரணிகள், 8.7 மில்லியன் இலங்கை தொழிலணிக்கிடையில் உயர்மட்டத்திலான வருகையின்மையையும் புரள்வு வீதத்தையும் விளைவாக்குகின்றது.

இந்நிறுவகமானது, உரிய சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தலைப்புகள் பற்றி தாபனங்கள் மற்றும் அக்கறைதாரர்களுக்கிடையே நீடித்த கலந்துரையாடலை ஊக்குவித்து, ஆதரவளிக்கின்றது. தொழில் சார்ஊறுகள் காரணமான பொருளாதார செலவீட்டினை கட்டுப்படுத்திக் குறைத்தல், வேலைத் தலங்களில் உற்பத்தித் திறனைச் செம்மைப்படுத்துதல், ஆரோக்கியமான, ஊக்குவிக்கப்பட்ட தொழில் அணியொன்றை உருவாக்குதல் போன்றவற்றிற்காக தனிப்பட்டவரின் பொறுப்பினை ஊக்குவிக்கின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சவால்களைத் தெரிவிக்கின்ற தாபனங்களுக்கு உதவுகின்ற தகவல்கள், கருவிகள் மற்றும் வளங்களுடன் கூடிய ஆற்றல்களை வழங்கு தொழிற்றுறை

நிபுணர்களினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அதிகளவில் கவனஞ் செலுத்தி வழங்குகின்றது. இந்த முயற்சிகள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொடர்புகளையும், வலையமைப்பையும் நிறுவுவதற்கும், இந்தவிடயம் தொடர்பில் மேலும் ஆய்வுகளையும், ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்கும் ஏனைய தாபனங்களுடன் இணைவதன் மூலம் நிறைவுசெய்கின்றது.

இந்நிறுவகமானது, மருத்துவ பரிசோதனைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் மதிப்பீட்டாய்வுடன் இணங்கி சூழல் கண்காணிப்பும் பயிற்சியும் மற்றும் பாரிய பிராந்திய அளவீடு, மன்றங்கள்இ மாநாடுகள் மற்றும் வலையமைப்பு நிகழ்வுகள் அத்துடன் ஆரோக்கியமானதும் அதிக பொருத்தமானதுமான வேலை செய்முறைகள் போன்றவற்றிற்கு உதவுகின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, பாகுபாடற்ற உலகதரத்திலான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையை எப்போதும் வழங்குகின்றதொரு நிறுவகம் என்பதுடன், தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைக் குறைக்கும் நோக்கத்துடன் பாதுகாப்பான, சுகாதாரமான வேலைச் சூழலை உருவாக்குவதுடன், சுய நிதியிடல் நிறுவகமொன்றாக நிறுவி நிலையாக இருப்பதற்கு கவனஞ் செலுத்துகின்றது.

மிகவும் வெற்றிகரமான முறையில் மேலுள்ள செயற்பாடுகளை ஆற்றுவதன் மூலம் வாடிக்கையாளர்களின் உச்சதிருப்திக்காக அவர்களுக்கு ஆக்கத்திறன்சார் சேவையை வழங்க முடிந்துள்ளதென்பதை தெரிவிப்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுகின்ற அதி உயர் இலக்கு குறுகிய காலப்பகுதியில் அடையப்பட்டுள்ளமை பாரிய வெற்றியென்பதையிட்டு நாம் பெருமைப்பட முடியும். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் சேவைகளை நிலையாக பல நிறுவனங்கள் பெற்றுள்ளன என்ற இந்த உண்மையை பின் தொடர்ந்து செய்யப்படுகின்ற ஆய்வு நிரூபிக்கின்றது.

அண்மை கடந்த காலங்களில், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், அவற்றின் பணியாளர்களின் சுகாதாரத் தற்காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது. இந்த ஆண்டுகாலப்பகுதியில், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பல தொழிற்றுறைகளுக்கிடையில் தொழில்சார் விபத்துக்களையும், நோய்களையும் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அனைத்து சுதந்திர வர்த்தக வலைய தொழிற்றுறைகளுக்கிடையிலும் அதேபோன்று உற்பத்தித் துறை, புடைவை மற்றும் ஆடை உற்பத்தித் துறை, விவசாயத்துறை போன்ற அத்தகைய அனைத்து தொழிற்றுறைகளிலும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதில் அவர்களது தேவைகளின் அடிப்படையில் மிகவும் வெற்றிகரமான சேவையை வழங்கி “தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் முத்திரையைப்” பதிக்க முடிந்திருந்தது.

1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள

தொலைநோக்கு

'அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பலை வழங்குதல்'.

செயற்பணி

'வேலைத்தலத்தின் பாதுகாப்பினையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தும் மற்றும் உற்பத்தித்திறனை செம்மைப்படுத்தும் பொருட்டு அனைத்து வகையான தொழில் வாய்ப்புத் தடைகளையும் தடுப்பதற்குரிய கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களையும் வலுப்படுத்துதல்'.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் குறிக்கோள்கள் பொதுவான குறிக்கோள்கள்

அ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி அத்துடன் தொழில்தருநர்களினதும் பணியாளர்களினதும் தொழில் மற்றும் பாதுகாப்பின் தன்மையைக் கவனத்திலெடுத்து, இருவரும் வேலையாற்றுகின்ற சூழல் பற்ற தேசிய கொள்கையை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்

(ஆ) வேலைத் தலங்களில் தொழில் தொடர்பான விபத்துக்கள் மற்றும் ஊறுகளைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்

(இ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் விசாரணைகள், ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள், அளவீடுகள் மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றை நடத்துதல், பெறுப்பேற்றல் மற்றும் அவற்றிற்கு உதவுதல்

(ஈ) உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது, தீங்கிளைக்கின்ற பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் அல்லது பிறவேறு தீங்குகள் பற்றி எந்த நிறுவனத்திற்கோ அல்லது ஆளுக்கோ ஆலோசனை சேவையை வழங்குதல்

(உ) தொழில்சார் உறவுகள் மற்றும் சுகாதாரத்தில் அத்துடன் தொடர்புபட்ட விடயங்களில் அறிவினை, பயிற்சியினைத் தேவைப்படுத்துகின்ற பணியாளர்கள், இருப்பாளர்கள், வேலையாளர்கள் அல்லது பிறவேறு நபர்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் தேவையான பயிற்சியை பிறவேறு நிறுவனங்களுடன் அல்லது இலங்கை அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அல்லது நிறுவகத்தினால் வழங்குதல் மற்றும் அத்தகைய கல்வி அல்லது பயிற்சியினைப் பூர்த்திசெய்வதன் பேரில் சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல்

(ஊ) உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது, தீங்கிளைக்கின்ற பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் மற்றும் தீங்குகளாகத் தெரிந்தவற்றை தவிர்த்தல் பற்றிய தேவையான சேவைகளை வழங்குதல்

((எ) (i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் நியமங்கள், நியதிகள், செய்முறைகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான சட்டவாக்கத் தேவைப்பாடுகள் பற்றி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்

(ii) வேலைச் செயன்முறை, பொருட்கள் மற்றும் முகவர்களை மதிப்பிடுதல் மற்றும் தீர்மானித்தல். மேற்பார்வைக்கமைவாக தடைசெய்யப்பட்டவை, மட்டுப்படுத்தப்பட்டவை அல்லது ஆக்கப்பட்டவையை வெளிப்படுத்தல்

(ஏ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், பரப்புதல் மற்றும் வெளியிடுதலை பொறுப்பேற்றல் அல்லதுஒருங்கிசைதல்

(i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் அல்லது ஏனைய ஒத்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் அல்லது அனுசரணையளித்தல் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடுதல்

(ஐ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட அமைச்சுக்களுக்கிடையிலான கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

(ஒ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செய்முறையினை மேம்படுத்தும் நோக்கத்திற்காக நூலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களைத் தாபித்தல் மற்றும் பராமரித்தல்

(ஓ) ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வுகூடங்களை விருத்தி செய்தல்

(ஔ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையிலிருக்கின்ற தேசிய, சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது பிறவேறு தாபனங்களுடன் இணைப்புகளை, வலையமைப்பினைத் தாபித்தல்

(∴) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் தேசிய நியமங்களை உருவாக்குதல்.

1.3 விசேடமுன்னுரிமைகள்

- நாட்டில் காலத்துடன் கூடிய தேவைகள் மற்றும் சவால்களை கவனத்தில் கொண்டு 2009 ஆம் அண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களின் அடிப்படையில் பாதுகாப்பு கலாசாரமொன்றை உருவாக்குதல்.

- பணியாளர்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான வேலைத்தலமொன்றுக்கான ஏற்பாடு.

- அதிகளவு நாளதுவரைப்படுத்தப்பட்ட அறிவினைப் பகிர்வது பற்றிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வினை உருவாக்குவதனூடாக பாதுகாப்பு அலுவலர்களுக்கிடையே தொழில்நுட்ப தகைமைகளை விருத்தி செய்தலும் செம்மைப்படுத்துதலும்.

- தொழிற்றுறையில் காணப்படுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சவால்களுக்கான தீர்வுகளைக் காணுதல்.

1.4 பணியாளர்களின் பதவிநிலைக் கட்டமைப்பு

சிரேஷ்ட முகாமைத்துவம்		மத்திய தர முகாமையாளர்கள		சிரேஷ்ட முகாமையாளர்கள்		ஆரம்ப மட்டம்		மொத்தம்		
அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	இடுப்பவர்களின் எண்ணிக்கை	வெற்றிடங் களின் எண்ணிக்கை வீதம்
07	02	03	03	10	06	05	05	25	16	36%

இரண்டாம் அத்தியாயம்

நிறுவனத்தின் சேவை ஏற்பாடு

நிறுவகத்தின் செயற்பாடுகள்

இந்த நிறுவகமானது, நாட்டில் பாதுகாப்பு கலாசாரத்தை மேம்படுத்தும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்புபட்ட பயிற்சி, ஆய்வு மற்றும் விழிப்புணர்வினை மேற்கொள்வதற்கான பொறுப்பாணையைக் கொண்டிருக்கின்றது. இதன்படி, கீழே காட்டப்பட்டுள்ளவாறு இரண்டு பரந்தவகையிலான செயற்பாடுகள் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2.1 சேவை ஏற்பாடு

அனைத்து தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் நாட்டிலுள்ள அனைத்து தொழில்சார் குழுமங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும், பயிற்சியையும் மற்றும் ஆய்வினையும் மேற்கொள்வதும் நிறுவகத்தின் பொறுப்பாணையாகும். இதன்படி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது அதனது வழமையான செயற்பாடுகள் மற்றும் குறிப்பிட்ட செயற்பாடுகள், சர்வதேச மற்றும் தேசிய ஒருங்கிணைவினூடாக தரமான, பாகுபாடற்ற சேவைகளை வழங்கிவருகின்றது.

2.1.1 வழமையான செயற்பாடுகள்

பின்வரும் செயற்பாடுகள் எமது வழமையான செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

அ. சூழலியல் கண்காணிப்பு

ஆ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் மதிப்பீடுகள்

இ. தொழில் புரிவதற்கான உடற்றகுதியை மதிப்பிடுதல்

அ. சூழலியல் கண்காணிப்பு

- இச்செயற்பாட்டின் குறிக்கோள், வேலைச் சூழல் நிலைமைகளின் தரங்களை உறுதிப்படுத்தும் வகையில் அதனை அளவிடுதலும் கண்காணித்தலும், அத்துடன், வேலையாளர்களுக்கு சுமூகமான, சுகாதாரமான வேலைத் தலத்தினை வழங்குதலுமாகும். பணிபுரியும் சூழல்சார் கண்காணிப்பானது, சத்தம், வெப்பம், வேலைத்தல வெளிச்சமட்டங்களிலுள்ள இரசாயனக் கூறுகள் மற்றும் விசேட தகைமையுள்ள அலுவலர்களால் அதி நவீன உபகரணங்களைப் பயன்படுத்துகின்ற இடங்களில் 'புளூ' வாயு மட்டங்கள் போன்ற அத்தகைய தொழில்நுணுக்க அளவீடுகளைப் பெறுவதன் மூலம் நடத்தப்படுகின்றது. பெற்றுக்கொள்ளப்பட்ட விளைவுகளின்படி, பணிபுரியும் சூழல்சார் செம்மைப்படுத்தல்கள் எடுத்தியம்பப்படுதல் வேண்டும் என்பதுடன், பரிந்துரைகளும் வழங்கப்பட வேண்டியிருக்கின்றன. பின்வரும் வசதிகள் சூழல்சார் கண்காணிப்புகளாக காணப்படுகின்றன.-உள்ளகக் காற்றின் தரத்திற்கானஅளவீட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் புளூ வாயுபகுப்பாய்வினைப் பயன்படுத்திபுகை வெளியீட்டினைப் பரிசோதித்தல்.
- உள்ளகக் காற்றின் தரத்திற்கான அளவீட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வாயு பகுப்பாய்வினைப் பயன்படுத்தி புகை வெளியீட்டினைப் பரிசோதித்தல்.
- தொழிலில் தூசி பம்புகளைப் பயன்படுத்தி தூசு மட்ட அளவீடுகளைப் பெறுதல்.
- சத்தமட்டமானிகளைப் பயன்படுத்தி சத்தமட்ட அளவீடுகளைப் பெறுதல்.
- அதியுயர் வெப்ப மட்டத்தைப் பரிசோதித்தல்.

ஆ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் பற்றிய மதிப்பீடுகள

பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர்மதிப்பீடுகள், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலர்களால் தொழிற்சாலை வளாகங்களில் மேற்கொள்ளப்படுவதுடன், பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட இடர்கள், ஆய்வு மற்றும் உரிய ஆவணங்களை மீளாய்வதன் மூலமான வேலையினூடாக மதிப்பிடப்படுகின்றன. இனங்காணப்பட்ட இடர்கள், நிறைவுக் கூட்டங்களில் சாரம்சப்படுத்தப்படுவதுடன், செம்மைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் உள்ளடங்கலாக இடர் முன்னுரிமைப்படுத்தல் அறிக்கையும் வழங்கப்படும்.

இ. தொழில் புரிவதற்கான உடற்றகுதி மதிப்பீடுகள்

பணிபுரியும் சூழலில் தீங்குகளின் வெளிப்பாட்டினைத் தவிர்ப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் வேலைத்தலத்திலுள்ள அனைத்து வேலையாளர்களும் உடனடியாக மதிப்பிடப்பட வேண்டிய தேவையுள்ளது. இதன்படி, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக அணி தொழிற்சாலை வளாகங்களுக்கு விஜயம் செய்து, பணியாளர்களின் வெளிப்படுத்தல் நிலைகளை கண்காணித்தல் அல்லது அவர்கள் இந்நிறுவகத்திற்கு வருகைதந்து, தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களால் பரிசோதனைகளை மேற்கொள்வர். அவர்களது குறித்த பணி இலக்குக்கான உடற்றகுதியை உறுதிப்படுத்தும் வகையில் பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையில் நம்பிக்கைக்குரிய மருத்துவ அறிக்கையொன்று ஆக்கப்படும். பின்வருகின்ற பரிசோதனை வசதிகள் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் காணப்படுகின்றன.

- கேட்கின்ற ஆற்றல் பற்றிய சோதனை
- வெவ்வேறு இரசாயனத் தாக்கம் பற்றிய இரத்தப் பரிசோதனை
- தொழில் புரிவதற்கான உடற்றகுதிச் சான்றிதழ்
- நுரையீரல் தொழிற்பாடு பற்றிய சோதனை
- பார்க்கும் திறன் பற்றிய சோதனை

2.2.1. விசேட செயற்பாடுகள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழிற்றுறையில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையைச் செம்மைப்படுத்துவதற்காகவும், அதற்கே உரியதாக தயாரிக்கப்பட்ட விசேட பயிற்சி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட கருத்திட்டங்கள், பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடுகளும், கருத்தரங்குகளும் மற்றும் பாதுகாப்பு, சுகாதார தகைமை விருதுகள் வைபவம் போன்ற தொழிற்றுறைக்கு அதரவளிக்கும் வகையில் விசேட செயற்பாடுகளை நடத்துகின்றது. அதற்கே உரியதாக தயாரிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களில் பல அத்தொழிற்றுறைகளின் விசேட வேண்டுகோளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு, புதிய தொழில்நுட்ப செயன்முறைகள் மற்றும் மனிதப் பண்புகள் காரணமாக தொழிற்றுறையால் முகம் கொடுக்கப்பட்ட புதிய சவால்களுக்காக வழங்கப்படுகின்றன.

இதன்படி, விசேட நிகழ்ச்சித் திட்டங்கள், வடிவமைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன.


அ.விசேட பயிற்சிகள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது பின்வரும் விசேட பயிற்சி மட்டங்களை வடிவமைத்துள்ளது.

- முதலாவது மட்டம்
- இரண்டாவது மட்டம்
- மூன்றாவது மட்டம்

இந்தப் பயிற்சிகள், பயிற்சி பெறுபவர்களின் கல்வி மட்டங்களை கவனத்தில் கொண்டு வடிவமைக்கப்படுகின்றன. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் தேசிய டிப்புளோமா (தே.வா.தொ.தகுதிமட்டம் 6), தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா (தே.வா.தொ.தகுதிமட்டம் 5), தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் கற்கைநெறி (தே.வா.தொ.தகுதிமட்டம் 4) மற்றும் விசேட குறுகியகால பயிற்சிகள் தொழிற்றுறைகளின் வேண்டுகோளின் அடிப்படையில் விசேடமாக விருத்தி செய்யப்படுகின்றன.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பயிற்சி வழிமுறை பின்வருமாறு



வரைபடம் 2.1 பாடநெறி கட்டமைப்பு

குறுகியகால பயிற்சிகள், பயிற்சிகளின் காலப்பகுதி ஒன்று முதல் ஐந்து நாட்கள் வரை முதலாம் மட்ட பயிற்சிகளாக கருதப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் பயிற்சி அமர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

- தொழிற்றுறை வேலையாளர்களுக்கான கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு
- நிர்மாணப் பாதுகாப்பு வேலைப் பயிற்சி அமர்வு
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அறிமுக அமர்வு
- தொழிற்றுறை தாதியர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- சுகாதார பராமரிப்பு வேலையாட்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- அலுவலக வேலையாட்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- ஆய்வுகூட வேலையாட்களுக்கு இரசாயனத்தைப் பாதுகாப்பாக கையாளுதல்
- ஹோட்டல் வேலையாட்களுக்கான உணவுப் பாதுகாப்பு
- தொழில்நுட்ப அலுவலர்களுக்கு இரசாயனத்தைப் பாதுகாப்பாக கையாளுதல்
- மன அழுத்த முகாமைத்துவம்

இந்தப் பயிற்சிகள், தொழிற்றுறையினால் ஒதுக்கப்படுகின்ற நேரத்தைக் கவனத்திலெடுத்து தொழிற்றுறையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் அனைத்தும் வளாகத்திற்குள் அல்லது வளாகத்திற்கு வெளியே மேற்கொள்ளப்படுவதுடன், பங்குபற்றியவர்கள் அனைவருக்கும் விசேட சான்றிதழொன்று வழங்கப்படுகின்றது.

இரண்டாவது மட்டப் பயிற்சி

இரண்டாவது மட்ட பயிற்சிகள், எந்த தொழிற்றுறையிலும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை முகாமை செய்வதற்கான தகுதியை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டிருந் நீண்டகால பயிற்சியாகக் கருதப்படுகின்றது. இந்தவகையான பயிற்சிகள், பாதுகாப்பு குழுக்களை நடத்தும் வகையில் அல்லது தீர்மானமெடுப்பதில் ஈடுபடக்கூடிய நிறைவேற்று தரத்திலுள்ளவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ முறைமைகளை முகாமை செய்வதில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு முக்கியமானதாகும். இந்தப் பயிற்சி, 750 மணித்தியாலங்களைக் கொண்ட 15 நாட்களுக்குள் முடிப்பதற்காக வடிவமைக்கப்படுவதுடன், தொழிற்றுறைப் பணியாளர்களுக்கு விசேட கவனம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, தொழில் புரிகின்ற பங்குபற்றுநர்களில் பெரும்பாலானோருக்கு அவர்களது வேலைநாட்களின் போது பங்குபற்ற நேரமின்மையால், பயிற்சியளிக்கும் இடம் மற்றும் வாராந்த அட்டவணைகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. தொழிற்றுறைகளின் வேண்டுகோளின் அடிப்படையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 15 நாட்கள் தொடர்ந்து இந்தப் பயிற்சிகளை ஒழுங்கமைப்பதற்கு நெகிழ்வுப் போக்குடையதாகவிருக்கின்றது. இந்த அமர்வு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தால் பரீட்சையொன்றுடன் முடிவுறுத்தப்படுவதுடன், பரீட்சையில் வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ள பங்குபற்றுநர்களுக்கு மட்டுமே சான்றிதழ் வழங்கப்படும். இந்த கற்கை நெறிக்கான நுழைவுத் தகுதி கல்விப் பொதுத் தராதர உயர்தரமாகும்.

• மூன்றாவது மட்டப் பயிற்சி

பாதுகாப்பான வேலைத்தலம் என்பது தொழில்சார் ஊறினைத் தடுப்பதற்கான உபாயத்தினை ஆக்குகின்றதொன்றாகும். அவ்வாறு செய்வதற்கு தகுதியுள்ள பாதுகாப்பு அலுவலர்கள் தொழிற்றுறையில் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். இந்த பாதுகாப்பு அலுவலர்கள், இலங்கையில் தேசிய தொழில்சார் தகைமையாக சான்றுப்படுத்தப்பட்டுள்ள மிகவும் உயர்ந்த தகைமையான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய

டிப்புளோமாவுடன் தகைமையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இந்த டிப்புளோமாவின் பாடவிதானம், தொழிற்றுறையுடன் தொடர்புட்ட பிரச்சினைகளின் தேவைகளுக்கு உதவி விருத்தி செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு அலுவலரொருவராக தகைமை பெறுவதற்கு 1500 மணித்தியாலங்களுக்குள் மூன்று கையேடுகள் நிறைவு செய்யப்படுதல் வேண்டும். மேலும், மாணவர்கள், சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான புள்ளிகளைப் பெறுவதற்கு பகுதியளவான நிறைவேற்றத்திற்காக கருத்திட்ட அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கின்றது. பட்டமளிப்பிற்கு முன்னதாக தொழில் புரியக்கூடிய வாய்ப்பு பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அடுத்த முன்னேற்றம், 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் தேசிய டிப்புளோமா என்பதாக இருக்கும்.

அ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கருத்திட்டங்கள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சர்வதேச தொழில் தாபனத்தினதும், பிறவேறு தேசிய, சர்வதேச அமைப்புகளினதும் ஒருங்கிணைப்புடன் தொழிற்றுறையில் பாதுகாப்பு கலாசாரத்தை செம்மைப்படுத்துவதற்கான குறிக்கோளுடன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கருத்திட்டங்களை மேற்கொள்கின்றது. பெரும்பாலும், இந்த கருத்திட்டங்கள் நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தெரிவு செய்யப்பட்ட முக்கிய பிரச்சினைகளை மையப்படுத்தி நடைமுறைப்படுத்துகின்றன.

ஆ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள் போட்டி

இ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் வருடாந்தம் ஒழுங்கமைக்கப்படுகின்ற பிரதான நிகழ்வுகளில் ஒன்றாகும். இந்த மாநாட்டின் குறிக்கோள், சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தில் முக்கியமானதான, இலங்கை தொழிற்றுறைகளுக்கிடையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட நாளதுவரைப்படுத்தப்பட்ட சர்வதேச. உள்நாட்டு தகவல்களைப் பரப்புவதாகும். இந்த மாநாட்டில் 500 இற்குமதிகமான தொழில் தருநர்கள் மற்றும் உயர் முகாமைத்துவத்தினர் பங்கு பற்றியிருந்தனர். ஆதிகளவான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட ஆக்கமொன்று காட்சிப்படுத்தப்பட்டதும், இந்த மாநாட்டின் முக்கிய செற்பாடுகளிலொன்றாகும். இந்த மாநாட்டினை ஒழுங்குபடுத்துபவர்கள், அறிவினைப் பரப்புவதற்கான அடித்தளத்தைப் பங்குபற்றுநர்களுக்கிடையே வழங்குகின்ற தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வலையமைப்பொன்றை உருவாக்குகின்றனர்.

ஈ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வு

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், பல்கலைக்கழகங்கள் மற்றும் சாட்சியத்தின் அடிப்படையில் சிக்கலான தீர்மானங்களை எடுப்பதற்கு எமது உதவி தேவைப்படுகின்ற தொழிற்றுறை அல்லது பிறவேறு தாபனத்தின் ஒருங்கிணைப்புடன் எமது ஆய்வுக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உ. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார

தொழில்வல்லுநர் ஒன்றியம்

இது, எமது மாணவர்கள் மற்றும் தொழிற்றுறை அக்கறைதாரர்களுடன் பலமான வலையமைப்பை விருத்தி செய்வதற்காக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அனைத்து மாணவர்களும் உறுப்பினர்களாக இணைவதற்கு தகைமை பெற்றுள்ளதுடன், அவர்களது தகைமைகளை அதிகரிப்பதுடன், தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கு அவர்களுக்கு உரிய வகையில் ஒன்றிய உறுப்புரிமை, தொழில்நுணுக்க உறுப்புரிமை, பட்டதாரி உறுப்புரிமை மற்றும் பட்டய உறுப்புரிமை போன்றவை வழங்கப்படும். இந்த ஏற்றத்தின் உச்ச ஒழுங்கு முறையானது, அவர்களது தொழில் முன்னேற்றத்தில் அவர்களது சாதனைகளை மதிப்பிட்டு சக உறுப்புரிமை வழங்கப்படும்.

ஊ. CSR கருத்திட்டங்கள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வெள்ளம், வறட்சி போன்ற அத்தகைய தேசிய அனர்த்தங்களில் உதவி தேவையான குழுமங்களுக்கு எப்போதும் ஆதரவளிக்கின்றது. இந்நிறுவகம், சாட்சியத்தினடிப்படையில் நிலைமையை மதிப்பிடுதல் மற்றும் அழிவு நிலைமையிலிருந்து வெளிவருவதற்கு ஆதரவளிக்கின்ற அதே வேளையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையை உயர்த்துவதற்கு முயற்சிக்கின்றது

2.1.3 சர்வதேச கூட்டிணைவுகள்

தரப்பட்டுள்ள குறிக்கோளின்படி தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இலங்கை தொழிற்றுறைகளில் பாதுகாப்பினையும், சுகாதார நிலைமையும் விருத்தி செய்வதற்கு ஏனைய பல சர்வதேச தரப்புகளுடன் கூட்டிணைந்து செயற்படுகின்றது. மலேசியா, சிங்கப்பூர் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் மற்றும் இந்தியா, புரூணை, இந்தோனேசியா, சீனா, யப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளிலுள்ள ஆசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆராய்ச்சி நிறுவகங்கள் போன்ற அத்தகைய சர்வதேச முகவர்கள் இலங்கை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்துடன் கூட்டிணைந்து செயற்படுவதுடன், அதிகளவான நாளதுவரைப்படுத்தப்பட்ட அறிவினைப் பகிர்கின்றது.

2.2 சேவைத் தரத்தினைச் செம்மைப்படுத்துதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், அதன் சேவை வழங்கலில் தொடர்ச்சியாக அதன் சேவையை தரமுயர்த்திக்கொண்டிருக்கின்றது. இந்நிறுவகம், எமது வாடிக்கையாளர்கள் அனைவரும், நட்புரீதியான சூழலையும், இலகுவாக அடையக்கூடிய முறைமைகளையும் பயன்படுத்துபவர்களாக இருப்பர் என்று எப்போதும் நம்புகின்றது. இதன்படி, சேவைதரச் செம்மைப்படுத்தல்கள் தொடர்பில், உட்கட்டமைப்பு விருத்திகள் மற்றும் தர முகாமைத்துவ முறைமை சான்றுப்படுத்துதல் விருத்திகள் போன்ற அத்தகைய இரண்டு உபாயங்கள் கவனத்திலெடுக்கப்படுகின்றன.

2.2.1 தர முகாமைத்துவ முறைமையை சான்றுப்படுத்துதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, சேவை வழங்கல் முறைமைப்படுத்தலினூடாக சேவைத் தரச் செம்மைப்படுத்தல்களை அடைய முடியும். இவ்வாறு செய்யும் நோக்கில், இந்தநிறுவகம், ஐளுழு 14001 தர முகாமைத்துவ முறைமைச் சான்றுப்படுத்தலையும், எமது அனைத்து பயிற்சிகளுக்கும் தேசிய

வாழ்க்கைத் தொழில்தர நியமங்களையும் பெற்றுள்ளது.

2.2.2 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் கட்டமைப்பு முன்னேற்றங்கள்

வாடிக்கையாளர்கள் எமது சொத்து. ஆகவே, இந்நிறுவகம், எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான, சௌகரியமான சூழலை வழங்குவதற்கு அதன் உட்கட்டமைப்பை விருத்தி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

மேலும், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், அதனது பணியாளர்களுக்கு சுமூகமான வேலைச் சூழலை வழங்குவதன் மூலம் பணியாளர்களின் அதிகூடிய செயல்திறனை பெற்றுக்கொள்ள முடியுமென்று நம்புகின்றது. இந்தத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது பழைய கட்டடமொன்றில் தொழிற்படுவதனால் இதன் கட்டமைப்பை விருத்தி செய்வதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்நிறுவகம், அதற்கான புதிய ஆய்வுகூடத்தையும், புதிய கேட்போர்கூடத்தையும், நூலகத்தையும் விருத்திசெய்தல் போன்ற அத்தகையவற்றுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மூன்றாம் அத்தியாயம்

2019 ஆம் ஆண்டுக்குரிய நிறுவனத்தின் முன்னேற்றம்

நிறுவனம்சார் முன்னேற்றம் - 2019


3.1 சேவை ஏற்பாட்டு முன்னேற்றம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, சூழலியல் கண்காணிப்பு விசேட தொழில் நுணுக்க செயற்பாட்டுக்காக இரண்டு அணிகளை பணிக்கமர்த்தியுள்ளது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, மிகவும் நவீனமான, நம்பத்தகு உபகரணங்களையும், நன்றாக பயிற்றுவிக்கப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்-களையும் இந்த விசேட பணி இலக்குக்கு பயன்படுத்தியுள்ளது. இதன்படி, தொழிற்சாலை ஒன்றிலிருந்து உரிய அளவீடுகளை சேகரிப்பதற்கு நாள் முழுவதும் எடுப்பதுடன், மேலதிக செம்மைப்படுத்தல் பரிந்துரைகளுடன் தொழில்நுணுக்க அறிக்கையும் எமது அணிகளால் வழங்கப்படுகின்றன. இதன்படி, ஆண்டுக்கு 150அறிக்கைகள் என்பது 50 இனால் அதிகரித்து 2019 ஆம் ஆண்டில் 206 தொழிற்சாலைகளுக்கு அவர்களது வேலைச் சூழல் நிலைமை-களைச் செம்மைப் படுத்துவதற்கு தேசிய தொழில்சார் பாதுகாப்புமற்றும் சுகாதார நிறுவ-கம் ஆதரவளித்துள்ளது. பின்வருகின்ற சாராம்சம் குறித்த அளவீடுகளுடன் தொடர்புபட்ட சூழலியல் கண்காணிப்புச் செயற்பாடுகளின் வருடாந்த முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

சூழல்சார் கண்காணிப்புவகை	உள்ளடக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை
சத்தமட்டம் அளவிடப்பட்ட வேலைச் சூழல்	185
வெளிச்சமட்டம் அளவிடப்பட்ட வேலைச் சூழல்	175
வெப்பமட்டம் அளவிடப்பட்ட வேலைச் சூழல்	175
தூசுமட்டம் அளவிடப்பட்ட வேலைச் சூழல்	187
காற்றின் தரமட்டம் அளவிடப்பட்ட வேலைச் சூழல்	170
புகை வெளியேற்றத்தின் மட்டம் அளவிடப்பட்ட வேலைச் சூழல்	172

உருவம் 3.1 வழக்கமான செயற்பாடுகள

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வழமையான செயற்பாடாக, வேலைத்தளங்களில் வெவ்வேறு ஆபத்தான வெளிப்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள மருத்துவ உடற்றகுதியை உறுதிப்படுத்தும் வகையில் பணியாளர்களுக்கிடையில் தொழில் புரிவதற்கான உடற்றகுதி பரிசோதனையை மேற்கொண்டுள்ளது. இதன்படி, 2019 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் நிறுவனம்சார் பதவியினரால் வேலை மதிப்பீடுகளுக்காக 679 உடற்றகுதி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும்,சுகாதாரமான வேலைச் சுற்றுப்புறச் சூழலை உறுதிப்படுத்தும் வகையில் பணிபுரியும் சூழலை செம்மைப்படுத்தும் குறிக்கோளுடன் ஆபத்தினை ஏற்படுத்தும் வேலைச் சூழல் மற்றும் இடர் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.



3.1.2 விசேட செயற்பாடுகளின் முன்னேற்றம்

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலர்களுக்கான பயிற்சி, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் விசேட செயற்பாடுகளில் ஒன்றாகும். இதன்படி, 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகளை அட்டவணை 3.2 காட்டுகின்றது.


பயிற்சிமட்டம்	பயிற்சியின் வகை	ஆரம்பத் திகதிகள்
மட்டம் 3	தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா	2019 பெப்.23 2019 செப். 22
மட்டம் 2	தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய சான்றிதழ்	2019 சனவரி. 19 2019 மார்ச் 07 2019 ஓகஸ்ட் 03 2019 ஓகஸ்ட் 07 2019 நவம்பர்22
மட்டம் 1	நிருமாணத்தில் பாதுகாப்பு - ஒருநாள் பயிற்சியமர்வு	2019 பெப். 27 2019 நவம்பர் 27-29
	சுற்றாடல் பாதுகாப்பு ஒருநாள் பயிற்சியமர்வு	2019 யூன் 12 2019யூலை12
	அபான்ஸ் குழுமத்துக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பயிற்சி	2019 நவம்பர்21
	சுகாதார பராமரிப்பு வேலையாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்	2019 யூலை19
	புடைவைத் தொழில் வேலையாட்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்	2019 மார்ச் 31

உருவம் 3.2 டிப்ளோமாதாரிகளின் முன்னேற்றம் 2012-2019

பயிற்சிமட்டம்	பயிற்சியின் வகை	ஆரம்பத் திகதிகள்
மட்டம் 1	இரண்டு நாள் மின்சார பாதுகாப்பு பற்றிய பயிற்சியமர்வு	2019 ஏப்பிரல்02 2019 ஒக்டோபர்30
	மேற்பார்வையாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பயிற்சி	2019 மார்ச் 28
	உயரத்தில் வேலை செய்பவர்களுக்கான ஒருநாள் பயிற்சியமர்வு	2019 யூன் 12
	தொழில்சார் முதலுதவி	2019 நவம்பர் 28
	ஆசிரியர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்	2019 டிசெம்பர் 28

உருவம் 3.2 டிப்ளோமாதாரிகளின் முன்னேற்றம் 2012-2019


2019 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் டிப்புளோமாவினை இரண்டு தொகுதியினர் நிறைவு செய்துள்ளதுடன், கீழ்வருகின்ற சட்டவரைபடம் 2012 இலிருந்து 2019 வரை முறையே தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தால் உருவாக்கப்பட்ட டிப்புளோமாதாரிகளின் எண்ணிக்கையின் வளர்ச்சியைக் காட்டுகின்றது.



உருவம் 3.3 சான்றிதழ் பெற்றுக்கொண்டோரின் முன்னேற்றம் 2012-2019

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தொழிற்சாலைகளிலிருந்து அதிகளவான கேள்வியின் பேரில் 6 தொகுதியினர் சான்றிதழ் கற்கைநெறிகளை வெற்றி-கரமாக நிறைவு செய்துள்ளது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ்



வரைபடம் 3.3

கற்றுக் கொண்டதன் அடிப்படையில், சில ஆண்டுகள் விருத்திசெய்து பணியாற்றியதன் பின்னர், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, பாடசாலையை விட்டு விலகுகின்றவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடிப்படை அறிவை வழங்குவதற்கான தேவை தொடர்பில் இடைவெளியை இனங்கண்டு, 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதல் தடவையாக அடிப்படைக் கற்கைநெறிக்கான புதிய பயிற்சியொன்றை ஆரம்பித்துள்ளதுடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்துடன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பயிற்சியொன்றைத் தொடர்வதற்கு இளைஞர்களுக்கு வழியொன்றை அமைத்துள்ளது. முதலாவது அடிப்படை பயிற்சி 2019 யூன் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், பரீட்சையொன்றை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததுடன், 'அசேஸ் என்ஜினியரிங் பிறைவேட் லிமிடெட்' கனிஷ்ட பாதுகாப்பு அலுவலர்களாக இவர்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்கியிருந்தது. இந்த பயிற்சி எதிர்காலத்தில் மேலதிக செம்மைப்படுத்தலுடன் முன்னெடுத்துச் செல்லப்படும். மேலும், தொழிற்றுறைகளின் வேண்டுகோளின் பேரில் ஒவ்வொருமாதத்திலும் 15 இற்கும் மேற்பட்ட குறுகியகால பயிற்சிகள் நடாத்தப்பட்டிருந்தன.

3.1.3 விசேட கருத்திட்டங்களின் முன்னேற்றம்

இலங்கையில் தற்போது உழைக்கும் மக்கள் தொகை 8.7 மில்லியன் என்று மதிப்பிடப்பட்டுள்ளதுடன், அவர்களில் 60மூ இற்கு அதிகமானோர் அதிகளவு அறிவில்லாத சிறிய அளவிலான தொழிற்றுறைகளில் பணியாற்றுவதுடன், அவர்களின் தொழில்தருநர்களும் பலநிதி நெருக்கடிகளுக்கும், பல தொழில்சார் ஆபத்துகளுக்கும் உள்ளாகின்ற இந்த தொழில்துறைகளில் பணியாளர்களின் முறையான பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏனைய மட்டுப்பாடுகளுக்கும் முகம்கொடுக்கின்றனர். ஆனால், தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரிய பங்களிப்பினைச் செய்கின்றனர். ஆனால், இந்த தொழிற்றுறை, உணவு, விவசாயம், தோட்டம், மீன்பிடி, பஞ்சுதொழில், செங்கல் தயாரித்தல் போன்றவற்றிலிருந்து ஆரம்பித்து பல்துறை தொழில் துறைப்பிரிவுகளை உள்ளடக்குகின்றது.

புல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் சிறிய வியாபாரம் வைத்திருப்பவர்களால் நடத்தப்படுவதுடன், இத்துறையில் தொழில்தருநர் மற்றும் பணியாளர்களுக்கிடையில் எந்த உடன்படிக்கையையும் காணமுடியவில்லை. இதனால், பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில முயற்சியாளர்கள், தவறான நிதி முகாமைத்துவத்தால் வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதுடன், வருகையின்மை, விபத்துக்கள் அதிகரித்தல் போன்ற அத்தகைய உற்பத்தித்திறனுடன் தொடர்புபட்டுள்ள விளைவுகளுக்கு அவர்கள் முகம் கொடுக்கின்ற பணியாளர் தொழில்தருநர் சுகாதாரப் பிரச்சினைகளில் அதிகளவு கவனம் செலுத்துவதில்லை. சிறிய அளவிலான, முறைசாரா துறைகளில் தொழில்சார் நோய்கள் மற்றும் விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில், விழிப்புணர்வினை, பயிற்சியை அத்துடன் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட ஏனைய சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய பாரிய தேவையுள்ளது. ஆகவே, இந்தத்தொழில் துறைகளில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை செம்மைப்படுத்துவது காலத்துடன் கூடிய தேவையாகும்.

கருத்திட்டத்தின் குறிக்கோள்

2019-2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமைகளை செம்மைப்படுத்துதல்.

உபாயங்கள்

1. தெரிவு செய்யப்பட்ட தொழில்களுக்குள் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வினை நடாத்துதல்.
2. சொல்லப்பட்ட தொழில்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆபத்துகள் மற்றும் இடர்களை இனங்காணுதல்.
3. செம்மைப்படுத்தல்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
4. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் நிலையான செம்மைப்படுத்தலைக் கண்காணித்தல்.

இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பின்வருவன போன்ற இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வடமாகாணத்தில் சர்வதேச தொழில் தாபனத்தினால் நிதியிடப்பட்டு, முகாமை செய்யப்பட்ட 'லீட்' கருத்திட்டத்திற்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் கருத்திட்ட பங்குதாரராக இனங்காணப்பட்டிருந்தது. இதன்படி, வடமாகாணத்தில் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை விருத்தி செய்வதனூடாக வியாபார அபிவிருத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான பணி இலக்கொன்று தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

ஆரம்பநிலையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தெரிவு செய்யப்பட்ட 10 சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளில் இடர் மதிப்பீட்டினை நடாத்தியிருந்ததுடன், காண்பிப்புகளின் அடிப்படையில், சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமையைச் செம்மைப்படுத்தும், தொழில்சார் விபத்துக்களை, நோய்களைக் குறைக்கும் அத்துடன் இழக்கப்படுகின்ற வேலை மணித்தியாலங்களைக் குறைக்கும் வகையில் ஈடுபட்டுள்ள அக்கறைதாரர்களுக்கு பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சி தேவைப்படுகின்றது என்று இனங்காணப்பட்டுள்ளது.

இதன்படி, திரு.விக்னேஷ் அவர்களால் மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன், வளவாளராக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அணி வளங்களைவழங்கியிருந்தது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அணியினால் 13 தொழில் அலுவலர்கள், 1 மாவட்ட தொழிற்சாலை பொறியியலாளர்,4 உணவுத் தொழிற்றுறை ஆலோசகர்கள் மற்றும் சில பங்குபற்றுநர்கள் உள்ளடங்கலாக 25 பங்குபற்றுநர்களுக்கு மூன்று நாள் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சி 2019 நவம்பர் 25இ 26 மற்றும் 27 ஆம் திகதிகளில ் யூ.எஸ். ஹோட்டலில் நடத்தப்பட்டிருந்தது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள் தெரிவு செயல்முறை

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள் - 2018, மூன்றாவது தடவையாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் 2019 ஓகஸ்ட் 22ஆம் திகதி தாமரைத் தடாக அரங்கில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வின் குறிக்கோள், இலங்கையில் சிறந்த தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை நடைமுறையில் கொண்டுள்ள தொழிற்றுறைகளுக்கு பரிசளிப்பதாகும். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரநிறுவகம் மூன்றாவது தடவையாகவும் இந்தநிகழ்வினை இம்முறை ஒழுங்குசெய்துள்ளது. விருதை பெறுபவர்கள் கடந்தஆண்டினைப் போன்று கடுமையான, பக்கசார்பற்ற தெரிவு செயல்முறையொன்றினூடாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தெரிவு செயல்முறையானது மூன்றுகட்டங்களைக் கொண்டிருக்கின்றது. முதலாவதாக, ஆதாரபூர்வமான ஆவணங்களுடன்கூடிய நிரப்பப்பட்ட விண்ணப்பங்களைப் பார்வையிட்டு உருவாக்கப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையில் ஆவணம் மீளாயப்படுகின்றது. ஆவணம் மீளாயப்பட்டதன் பின்னர், தெரிவு செய்யப்பட்ட தொழிற்றுறைகளுக்கு நிபுணர்கள் அணி விஜயத்தை மேற்கொண்டு, உண்மையான செயல் நடைமுறையினை அவதானித்து, மென்பொருள் பொதியொன்றினைப் பயன்படுத்தி புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. இறுதித் தெரிவு, நிபுணர்கள் குழாத்திற்கு சிறந்த குறிப்பிடத்தக்க செயல்முறையினை முன்வைப்பதன் மூலம் நிபுணர் குழாத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. உற்பத்தி, ஹொட்டல், உணவு மற்றும் குடிபானம், புடைவைகளை ஏற்றி இறக்குதல், மருத்துவமனைத் துறைகள் போன்ற அத்தகைய அனைத்து தொழிற்றுறைகளும் இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்கு சமமான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், வெற்றியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுமிருந்தனர். மேலும், பல்தேசிய, உள்நாட்டுபெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான தொழில் துறைகளுக்கும் இந்தப் போட்டியில் தமது தகைமையைக் காட்டுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. 200 போட்டியாளர்களுக்கிடையில் வெவ்வேறு துறைகளிலிருந்து 58 இற்கும் மேற்பட்ட தொழிற்றுறைகளிலிருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்தப் போட்டியின் வெற்றியாளர்களாக வரவுள்ள அவர்களது பயணத்தில் வெற்றியாளர்களுக்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நல்வாழ்த்துக்கள்.

தொழிற்றுறைகளில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை பின்வரும் வகையில் கவனத்தில் கொள்ளமுடியும்.

- பணியாளர்களின் வாழ்க்கையைப் பாதுகாத்தல்
- ஏதேனும் தொழிலில் ஆதனங்களைப் பாதுகாத்தல்
- தொழிலின் உற்பத்தித திறனைச் செம்மைப்படுத்துதல்
- வேலையாட்களை ஊக்குவிப்பதனை அதிகரித்தல்

- வேலையாட்களின் புரள்வினைக் குறைத்தல்
- தொழிலணியின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல

இலங்கை தொழிற்றுறைகளில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப் படுத்துவதன் மூலம் நாட்டிற்கு முக்கியமானவையாக பின்வருவனவற்றை றக் கோடிட்டுக் காட்டமுடியும்.

- முதலீட்டாளர்களைக் கவருதல்
- தேசிய மருத்துவ செலவீனங்களைக் குறைத்தல்
- தொழில்தருநர் - பணியாளர் உறவினை விருத்தி செய்தல்
- காப்புறுதிமற்றும் நட்டஈட்டுச் செலவீனங்களைக் குறைத்தல்

இலங்கையில் பின்வருவன போன்ற அத்தகைய பாதுகாப்பு மற்றும் சுகாதார சட்டவாக்கம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை அதிகரிப்பதற்கு அதிக பலத்தை வழங்குகின்றது.

- தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் / கடைகள் மற்றும் அலுவலகச் சட்டம்
- வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம்
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரநிறுவகம் / தொழில் அமைச்சு தொழில் திணைக்களம்
- தகுதிவாய்ந்த தொழிலணி விசேடமாக தொழில் அலுவலர்கள் / தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர்கள்

கூட்டிணைப்பு என்பது அவர்களது தொழிற்றுறைகளில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்களை செம்மைப்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற போதிலும், பின்வருவன போன்ற காரணங்களினால் தேசிய அமைப்பொன்றாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரநிறுவகம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவதில் சில சவால்களை எதிர் கொண்டுள்ளது.

- முகாமைத்துவ அர்ப்பணிப்பின்மை
- தொழிலணியின் தொழில்சார் பாதுகாப்பு தொடர்பில் தகுதியின்மை
- பாதுகாப்பு என்பது செலவீனமொன்றல்ல, அது முதலீடொன்றாகும்
- போதுமானஅளவில் இல்லாத நிறுவனம்சார் பாதுகாப்பு ஆசாரம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப் படுத்துவதற்கான பொறுப்பினை எடுப்பதற்கு தொழிற்றுறைத் தலைவர்களுக்கு குறிப்பொன்றினைச் சேர்த்துக் கொள்வதற்கு விரும்புகின்றது.

- பணியாளர்களின் வாழ்க்கையைப் பாதுகாத்தல்
- ஏதேனும் தொழிலில் ஆதனங்களைப் பாதுகாத்தல்
- தொழிலின் உற்பத்தித திறனைச் செம்மைப்படுத்துதல்
- வேலையாட்களை ஊக்குவிப்பதனை அதிகரித்தல்

- வேலையாட்களின் புரள்வினைக் குறைத்தல்
- தொழிலணியின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்

இலங்கை தொழிற்றுறைகளில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப் படுத்துவதன் மூலம் நாட்டிற்கு முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் கோடிட்டுக் காட்டமுடியும்.

- முதலீட்டாளர்களைக் கவருதல்
- தேசிய மருத்துவ செலவீனங்களைக் குறைத்தல்
- தொழில்தருநர் - பணியாளர் உறவினை விருத்தி செய்தல்
- காப்புறுதிமற்றும் நட்டஈட்டுச் செலவீனங்களைக் குறைத்தல்

இலங்கையில் பின்வருவன போன்ற அத்தகைய பாதுகாப்பு மற்றும் சுகாதார சட்டவாக்கம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை அதிகரிப்பதற்கு அதிக பலத்தை வழங்குகின்றது.

- தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் / கடைகள் மற்றும் அலுவலகச் சட்டம்
- வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம்
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரநிறுவகம் / தொழில் அமைச்சு தொழில் திணைக்களம்
- தகுதிவாய்ந்த தொழிலணி விசேடமாக தொழில் அலுவலர்கள் / தொழி ற்சாலை பரிசோதனை பொறியியலாளர்கள்

கூட்டிணைப்பு என்பது அவர்களது தொழிற்றுறைகளில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்களை செம்மைப்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற போதிலும், பின்வருவன போன்ற காரணங்களினால் தேசிய அமைப்பொன்றாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரநிறுவகம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவதில் சில சவால்களை எதிர் கொண்டுள்ளது.

- முகாமைத்துவ அர்ப்பணிப்பின்மை
- தொழிலணியின் தொழில்சார் பாதுகாப்பு தொடர்பில் தகுதியின்மை
- பாதுகாப்பு என்பது செலவீனமொன்றல்ல, அது முதலீடொன்றாகும்
- போதுமானஅளவில் இல்லாத நிறுவனம்சார் பாதுகாப்பு ஆசாரம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப் படுத்துவதற்கான பொறுப்பினை எடுப்பதற்கு தொழிற்றுறைத் தலைவர்களுக்கு குறிப்பொன்றினைச் சேர்த்துக் கொள்வதற்கு விரும்புகின்றது.

- தொழில்தருநர் ஒருவர் தமது தொழிலணியினை அவர்கள் கொண்டுள்ள சி றந்த சொத்துக்களிலொன்றாக இனங்காணுதல் வேண்டும்.
- தாங்கள் அவதானஞ் செலுத்துகின்ற இலாபம், உற்பத்தி மற்றும் வினைத் திறன் போன்றவற்றுக்குக் கொடுக்கின்ற அதே முன்னுரிமையை அவர்களுக்கும் வழங்குங்கள்.
- பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தங்களின் தொழிலணியினை ஈடுபடுத்துங்கள், ஏனெனில், அவர்கள் உங்களது நிறுவனத்தை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய சிறந்த கருத்துக்களுடன் இருக்கின்றார்கள்.
- அனைத்து நிகழ்வுகளும் அறிக்கையிடப்படுதல் வேண்டும். சட்டத்

தேவைப்பாட்டுக்காக அன்றி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தீர்மானங்கள் பற்றிய தேசிய உபாயமொன்றை விருத்தி செய்வதற்கு அது பிரதிபலிப்பினையும், ஆதரவினையும் வழங்குகின்றது.

▪ அதற்கு ஒத்ததாக, சரியான மூல காரணத்தைப் பகுப்பாய்வு செய்வதுடனான உங்களின் விசாரணையின் அடிப்படையில் சரியான, தடுப்பு நடவடிக்கைகள் மீது நீங்கள் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

▪ இதற்கு மேலதிகமாக, 'பாதுகாப்பற்ற நிலைமைகள்' 'பாதுகாப்பற்ற பழக்கவழக்கங்கள்', 'மயிரிழையில் தப்புதல்' என்று அறிக்கையிடுவதன் மீது நீங்கள் அவதானஞ் செலுத்தி, மேலும் நிகழாது தடுப்பதற்கு உங்களது நிறுவன மட்டத்திலான பகுப்பாய்வினை நிறைவு செய்ய வேண்டித் தேவைப்படுகின்றது.

- சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கான சட்டக் கட்டுக்கோப்பினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் ∴ தொழில் அமைச்சின் பங்கு.
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பங்கு-கொள்கை ஆக்கும் அமைப்பொன்றாக விழிப்புணர்வினை உருவாக்குதல், பயிற்சியளித்தல் மற்றும் ஆய்வுசெய்தல்.
- தொழிற்றுறைகளில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை நடைமுறைப்படுத்துவதால் தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் நாட்டுக்கான அனுகூலங்கள்:
  - தொழில்தருநருக்கான அனுகூலமாக நிலையான வேலைச் சூழல்
  - வாழ்க்கைத் தரத்தைச் செம்மைப்படுத்துதல்
- தற்போது அவதானம் செலுத்தப்படும் விடயப்பரப்பு.
  - இலங்கையில் கட்டுமாணத் துறையை விருத்திசெய்தல் மற்றும் எதிர்கொள்ளத்தகு சவால்கள் - உயரத்திலிருந்து வீழ்தல், மின்சாரத்தாக்கம், சுமைகளைத் தூக்குதல், அகழும் செயற்பாடுகள், பாரமான இயந்திரங்களை இயக்கச் செய்தல்.
  - இலங்கையின் தற்போதைய நிலைமையில் போக்குவரத்தின் பாதுகாப்பு பற்றிய முக்கியத்துவம் - பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான பொறுப்பு வேலைத்தளத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதொன்றல்ல. அது விநியோகத்தர்களுடன் ஆரம்பித்து இறுதிப் பயனாளிகளுடன் முடிவடைகின்றது. அந்த பிரிவுகளில் பலபோக்குவரத்துக்கள் பொதுவீதிகளினூடாகவே செய்யப்படுகின்றன. தொழிற்சாலைகளால் பயன்படுத்தப்படும் வாகனங்கள் இயங்குகையில் நீங்கள் பாதுகாப்பான போக்குவரத்துப் பொறிமுறையை, நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்புவாய்ந்தவர்கள்.
- இலங்கையில் பாதகாப்பு நியமங்களை உயர்த்துவதற்கு அரச - தனியார் பங்குடமையுடன் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்துடன் இணையுமாறு தொழில் துறைகளைக் கேட்டுக்கொள்ளுதல்.
- வேலைத்தளங்களில் விபத்துக்கள் இல்லை என்பதை அடைவதற்கான பாதுகாப்பான நியமங்களைச் செம்மைப்படுத்துவதற்கான பொறிமுறையாக 'தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமைவிருது' என்பதனைப் பயன்படுத்துங்கள்.
  - அரச நிறுவகமாக நாம் தங்களின் அனைத்து சிறந்த நடைமுறைகளையும் பாராட்டுவதில் ஆர்வமாக உள்ளோம், ஏனெனில், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள் ஏனைய அனைத்து தொழிற்றுறைகளிடையேயும் தங்களை அளவுகோலாக்குகின்றது.

- தெரிவு செய்கின்ற செயல்முறையின் போது தங்களின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு விஞ்ஞானரீதியான அணுகுமுறையை நாம் எப்போது பின்பற்றுகின்றோம்.
- வேலையாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் பற்றிய தொடர்ச்சியான செம்மைப்படுத்தலை நாம் எதிர்பார்க்கின்றோம்.

















படம் 3.1 - தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான சிறப்பு விருது 2019

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு - 2019

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார வருடாந்த மாநாடு, தொழில்சார்விபத்துக்கள் மற்றும் நோய்களைக் குறைக்கும் வகையில் தொழிற்றுறையில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்தும் குறிக்கோளுடன் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தின் 2 ஆவது வாரத்தில் ஒழுங்கமைக்கப்படுகின்றது.

மாநாட்டின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- தொழில்தருநர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வினை உருவாக்குதல் மற்றும் நாளதுவரைப்படுத்தப்பட்ட அறிவினை வழங்குதல்.
- ஆர்வமுள்ள தரப்புகளிடையே பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் நாளதுவரைப்படுத்தப்பட்ட அறிவினை உருவாக்குவதும் பரப்புவதும்.

இந்தவாரத்தின் குறிக்கோள்களைஅடை வதற்கானதிறமுறைகள்

- தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு, 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதி 400 இற்குமதிகமான தொழிற்றுறையாளர்களின் பங்குபற்றுதலுடன் சங்கிரில்லா ஹோட்டலில் நடத்தப்பட்டிருந்தது.
- தேசிய டிப்புளோமாதாரிகளுக்கான பட்டமளிப்பு 2020 ஒக்டோபர் 14 ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் நடத்தப்பட்டிருந்தது.
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழைப் பெறுபவர்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் வைபவம் அதே நாளில் சங்கிரில்லா ஹோட்டலில் பி.ப 6.00 மணிக்கு நடத்தப்பட்டிருந்தது.
- பாதுகாப்பு மற்றும் சுகாதாரமன்றம் 16 முதல் 19 வரை தே.தொ.பா.சு. நிறுவக வளாகத்தில் 200 பங்குபற்றுநர்கள் பங்கு பற்றி நடத்தப்பட்டிருந்ததுடன், 34 திறந்த செயலமர்வுகளும் நடத்தப்பட்டிருந்தன.
- தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரமாநாடு 400 இற்குமதிகமான தொழிற்றுறையாளர்கள் மற்றும் சர்வதேச நிபுணர்களின் பங்கேற்புடன் அனைவரையும் பாதுகாத்து, அனைத்து பாதுகாப்பான தற்காப்புகளையும் பின்பற்றி சங்கிரில்லா ஹோட்டலில் நடத்தப்பட்டிருந்தது. இது, இலங்கை தொழிற்றுறையாளர்களுக்கு அவர்களின் அனுபவங்களையும், சர்வதேச நிபுணர்களின் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதற்கும் தொழில்சார் காயங்களைத் தடுப்பதற்கு புதிய திறமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மிகவும் சிறந்த வாய்ப்பாகும்.





















படம் 3.2 - தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான மாநாடு 2019

டிப்புளோமாதாரிகளுக்கான தேசியபட்டமளிப்பு விழா

தேசியபாதுகாப்புமற்றும் சுகாதார டிப்புளோமா கற்கை நெறியினைப் பூர்த்திசெய்துள்ள 14 மற்றும் 15 ஆம் தொகுதியில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கும் 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதி சங்கிரில்லா ஹோட்டலில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 135 இற்கும் அதிகமானமாணவர்களும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும் உத்தியோகபூர்வ பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டிருந்தனர்.













படம் 3.3 - தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான பட்டமளிப்பு விழா

தேசியபாதுகாப்பு மற்றும் சுகாதார மன்றம்

இது, ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கிடையில் நாளதுவரைப்படுத்தப்பட்ட தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் குறிக்கோளுடன் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட எண்ணக்கருவொன்றாகும். இந்தமன்றம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பயிற்சி வளாகத்தில் இடம்பெற்றிருந்தது. வெவ்வேறு விடய நிபுணர்களால் ஒரு மணித்தியால இணை செயலமர்வுகள் நடத்தப்பட்டிருந்தன. இந்த செயலமர்வுகளின் போது எந்த இணை செயலமர்வுகளிலும் பங்குபற்றுவதற்கு எமது உறுப்பினர்களுக்கும் தொழிற்றுறையாளர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. இது, தேசிய மாநாட்டில் பங்கு பற்ற முடியாது போனவர்களுக்கு பங்குபற்றுவதற்கு முன்னுரிமையளிக்கப்பட்ட இலவசமான செயலமர்வொன்றாகும். கைதிகளுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சிகளை நடத்துவதனால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு விசேட செயலமர்வொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.















தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான ஒன்றுகூடல்

குறிப்பிடத்தக்க அடைவுகள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அதனது அனைத்து மாணவர்களையும் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொழிற்றுறை நிபுணர்களையும் வலையமைப்பிற்குள் கொண்டுவரும் குறிக்கோளுடன் தேசிய பாதுகாப்பு தொழில்சார் ஒன்றியத்தை ஒழுங்கமைத்திருந்ததுடன், ஆரம்பசெயலமர்வு ஜய்க் ஹில்டன் ஹோட்டலில் குறிக்கோள்கள் மற்றும் எதிர்கால முற்போக்கான இயக்கிகளை அறிமுகப்படுத்தி நடத்தப்பட்டிருந்தது. எமது மாணவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்ததுடன், வலையமைப்பிற்காக மற்றும் ஒருவருடன் ஒருவர் தொடர்பினைக் கொண்டிருப்பதற்காகவும், தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்காகவும் 'வட்ஸப்' குழுமமொன்று உருவாக்கப்பட்டிருந்தது.

3.1.4 சர்வதேச உறவுகள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, ஒத்த தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையின் பங்குதாரர்களுடன் தொடர்ந்தேர்ச்சியாக ஒருங்கிணைந்து செயல்படுகின்றது தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் சேவை ஏற்பாடுகளைச் செம்மைப்படுத்துவதற்கு சர்வதேசத்தின் ஒருங்கிணைவு முக்கியமானதாகும். இதன்படி, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்கு மலேசிய மற்றும் இந்திய தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகங்களின் நிபுணர்களை எமது தேசிய மாநாட்டின் போது அவர்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக பெற்றுக் கொள்ள முடிந்திருந்தது. மேலும், பங்களாதேசத்தின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அணியொன்று இலங்கை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், பங்களாதேசத்தில் ஒத்த நிறுவனமொன்றை உருவாக்கும் நோக்கில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அனுபவங்களை கற்றறிவதற்காக ஒரு வாரத்தை செலவிட்டிருந்தனர்.

3.1.5 பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆய்வு

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆய்வுகளை ஆற்றுவதற்கான பணிப்பாணையைக் கொண்டிருக்கின்றது. இதன்படி, 'மாஸ்' ஹோல்டிங்ஸ், அசைகின்ற பாகங்களுடன் வேலையிலீடுபட்டுள்ள ஆடைத் தொழிற்சாலை பெண் வேலையாளர்களிடையே சுகாதாரப் பாதிப்பு தொடர்புபட்ட தொழில்சார் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விரும்பியுள்ளது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அசைகின்ற பாகங்களுடன் வேலையிலீடுபட்டுள்ள, நிற்கின்ற மற்றும் இருக்கின்ற நிலைகளில் வேலையிலீடுபட்டுள்ள ஆடைத் தொழிற்சாலை பெண்களிடையே தசைக்கூட்டுநோய்களின் பாதிப்பினை மதிப்பிடுவதற்காக ஒப்பீட்டு குறுக்குப் பிரிவுசார் ஆய்வொன்றினை நடத்தியுள்ளது. இந்த ஆய்வின் காண்பிப்புகள் பிரசுரிக்கப்பட்டு, வேலையாட்களுக்கிடையில் எதிர்காலத்தில் சுகாதார செம்மைப்படுத்தலை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக உரிய தொழிற்றுறைகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

3.2 உட்கட்டமைப்பு அபிவிருத்தி முன்னேற்றம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தேவையான மதிப்பீட்டினை நடத்தியதன் பின்னர் அதனது உட்கட்டமைப்பினை விருத்திசெய்ய முடிந்திருந்தது. இதன்படி, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்கு பணிபுரிவதற்கான உடற்றகுதி மற்றும் கேட்பொலி சார்ந்த ஆய்வுகூடம் சூழலியல் கண்காணிப்பு ஆய்வுகூடம், அலுவலகக் கட்டமைப்பு, நூலகக் கட்டமைப்பு, வகுப்பறை வசதிகள் மற்றும் கேட்போர்கூடம் போன்றவற்றை விருத்தி செய்ய முடிந்திருந்தது. மும்மணிகளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனைத்து அக்கறைதாரர்களின் பங்கேற்புடன் அங்குரார்ப்பண வைபவமொன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.













படம் 3.5 - தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் மற்றும் அரங்கம

நான்காம் அத்தியாயம்

நிறுவகத்தின் சாதனைகள

நான்காம் அத்தியாயம் நிறுவகத்தின் சாதனைகள

நிறுவகத்தின் சாதனைகள

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 170மூ இனால் பணிபுரியும் சூழலைக் கண்காணிப்பதனை விரிவுபடுத்த முடிந்திருந்ததுடன், இரண்டு அணிகளாக முன்னெடுக்கப்படுகின்ற 200 தொழிற்றுறைகளுக்கு தனது சேவையை உறுதிப்படுத்தியிருந்தது.
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அணித் தொகுதிகளில் இரண்டு டிப்புளோமாக்களிலும் பங்கு பற்றுபவர்களின் எண்ணிக்கை எதிர்பார்த்ததை விட விஞ்சிக் காணப்பட்டமை.
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களிலொன்றை 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெற்றிகரமாக நிறைவு செய்ய முடிந்துள்ளது.
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு, எமது அனுசரணையாளர்களின் ஒருங்கிணைவுடன் 450 இற்குமதிகமானவர்களின் பங்கேற்புடன், வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்தது.
- தொழிற்றுறைப் பணியாளர்களிடையே தொழில் புரிவதற்குரிய உடற்றகுதியை அதிகரிப்பதற்கான மருத்துவ சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் நடமாடும் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

ஐந்தாம் அத்தியாயம் நிதிப

பகுப்பாய்வு

ஐந்தாம் அத்தியாயம்
நிதிப் பகுப்பாய்வு

	2019	2018
தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடநெறியிலிருந்து கிடைத்த வருமானம்	20,036,775.00	19,293,425.00
சூழலியல் அளவீடுகளிலிருந்து கிடைத்தவருமானம்	12,338,240.00	10,987,630.00
பிற நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் மூலம் வழங்கிய சேவைகளிலிருந்து கிடைத்த வருமானம்	6,923,981.00	5,209,602.15
மருத்துவப் பரிசோதனை நடவடிக்கைகள் மூலம் கிடைத்த வருமானம்	2,891,360.00	4,399,492,50
தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தினத்திலிருந்து பெறப்பட்ட வருமானம்	3,798,680.00	4,927,400.00
(தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அபிவிருத்தி நிதி) வட்டி மூலம் கிடைத்த வருமானம்	10,404,473.00	8,673,883.60
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் உறுப்புரிமையிலிருந்து பெறப்பட்ட வருமானம்	77,500.00	85,500.00
ஏனைய வருமானம்	260,302.00	313,679.25
மொத்தம	**56,731,061.00**	**53,890,612.50**

அட்டவணை 5.1: நிதி பகுப்பாய்வு 2018 - 2019

எனது இலக்கம் : எல்ஈடப்ளியூ/ஏ/என்ஐஓஎஸ்எச்/01/2019/01 திகதி : 2020 அக்டோபர் 12

தலைவர்
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிறுவகத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) நிறுவனமானது தற்போது ஜாவத்த பிரதேசத்தில் தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான 0.1840 ஹெக்டெயர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடமொன்றில் பேணப்பட்டு வருவதோடு கட்டிடத்தினை நவீனமயமாக்கும் பணிகளுக்காக 2019 டிசம்பர் 31 திகதிவரை நிறுவகத்தினால் 21,140,552 ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வரையிலும் சொத்தின் உரிமை நிறுவகத்திற்கு சாட்டிக்கொள்ளப்பட்டிருக்கவில்லையென்ற போதிலும் இலங்கை பொதுத்துறை

கணக்கீட்டு நியமம் 07 இன் 87(9) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களுக்கான உரிமை நிறுவகத்திற்கு இல்லையென்பது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் பயன்படுத்தபட்ட காலப்பகுதிக்காக மட்டும் சொத்துக்கள் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் நிறுவகத்தினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படும் வருடத்திலும் விற்பனை செய்யப்படும் வருடத்திலும் முழுமையாக தேய்மானம் செய்யும் அடிப்படையில் சொத்துக்கள் தேய்மானம் செய்யப்பட்டிருந்தன. அதன் காரணமாக நடப்பு வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் 6,692,704 ரூபாவான 15 சொத்து வகைகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மிகை தேய்மானச் செலவினம் 374,104 ரூபாவாக அமைந்திருந்தது.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக தேய்மானம் அடைந்திருந்த கிரயம் 7,132,880 ரூபாவான சொத்துக்கள் மேற்கொண்டும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன்படி ஏற்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2019 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் தொழில் அமைச்சிலிருந்து கிடைக்கப் பெறவேண்டிய பணமாக 7,623,444 ரூபா நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் தொழில் அமைச்சின் அன்றைய தினத்திற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மேற்படி பொறுப்பு 4,074,197 ரூபாவாக காட்டப்பட்டிருந்தது. ஆயினும் குறிப்பிட்ட 3,549,247 ரூபா வித்தியாசத்திற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு தேவையான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02கு முரணாக தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளின் கீழான தேறிய காசுப்பாய்ச்சல்கள் முறையே 165,000 ரூபா, 6,800,844 ரூபா மற்றும் 11,963,481 ரூபாவாக அதிகமாக காட்டப்பட்டிருந்தன.

(ஊ) 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்த போது வெளிக்கொணரப்பட்ட 3,021,272 ரூபாவாக அமைந்திருந்த தவறுகள் சரி செய்யப்பட்டிருந்த போதிலும் அத் தவறுகளுக்கான சரி செய்தல்கள் இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 03 இன் 47, 48 மற்றும் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய பின்னோக்கியதாக சீராக்கல் செய்யப்பட்டு ஒப்பீட்டு புள்ளி விவரங்கள் (restated comparative figures) நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தை தொடர்ந்து பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது நிறுவகத்தைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிறுவகத்தின் இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு நிறுவகமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும்

என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்துவதன் காரணமாக எழக்கூடுமென்பதுடன் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் எனது கருத்துக்கான அடிப்படைகளாகும். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவகத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை தரப்புகள் விழிப்பூட்டப்பட்டன.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள தாக்கத்தினைத் தவிர கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு எனது விசாரணையின் மூலம் காணப்படுகின்ற வகையில் உரிய நிதிசார் அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன என்பது.

பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டதனுள் பின்வரும் கூற்றுக்களை முன்வைக்கும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு நிறுவகம் சம்பந்தமான ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ சாதாரண வர்த்தக நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர சம்பந்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாத வகையில் செயற்பட்டுள்ளது என்பது.

சட்டதிட்டங்கள்/ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு	அமைந்தொழுகாமை
(அ) 03/2018 மற்றும் 2018 யூலை 18 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் I (ஆ) மற்றும் II	i. நிறுவகத்தின் ஊழியர்களுக்குச் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளை அதிகரித்தலானது பொதுத் திறைசேரியின் முன்கூட்டிய அங்கீகாரம் மற்றும் விதப்புரைகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும் அந்த அங்கீகாரங்கள் இன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை மட்டும் பெற்று 369,894 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தது. ii. நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற

	பாடநெறிகளில் பங்கேற்கும் வளவாளர்களுக்கு செலுத்தல்களை மேற்கொள்ளும்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சி விரிவுரையாளர்களுக்கு 1,022,750 ரூபா தொகை அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றுக்கு அமைந்தொழுகாத வகையில் செயற்பட்டுள்ளனர் என்பது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணகாய்வுச் சட்டத்தின் 12(ஏ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுள்ள வகையிலும் உரிய காலப்பகுதியில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் (பெறுகை) செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறுவகத்தின் கடனாளர் நிலுவை 9,265,761 ரூபா என்பதோடு கடனாளர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் அதில் 3,348,710 ரூபா 90 நாட்களைக் கடந்த கடனாளி நிலுவைகள் காணப்படுகின்ற போதிலும் அத்தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் குருதி மாதிரிகளைப் பரிசோதிப்பதற்காக 2015ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் ஆகக் குறைந்த விலைகளின் கீழ் இச்சேவையை வழங்கியதனால் 3 வகையான பரிசோதனைகளுக்கான கட்டணங்களை 300 ரூபா வீதம் அதிகரிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு மீண்டும் விலை கோரல்களை மேற்கொள்ளாமல் இந்த நிறுவனத்திடமிருந்து 2014 ஆம் ஆண்டு தொடக்கம் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6.1 இன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் வழங்கப்பட்டு 6 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் மட்டும் மீண்டும் ஆடர் செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை 05 வருடங்கள் தொடர்ச்சியாக இந்த நிறுவனத்தின் மூலம் மட்டும் குருதிப் பரிசோதனைகள் செய்து கொள்ளப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டில் மட்டும் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக 16 சந்தர்ப்பங்களில் 384,990 ரூபா செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

1.4 நிதிக்கூற்றுக்கள்

1.4.1 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் பற்றிய உள்ளக கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் துல்லியமான அதிகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்துதல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிதல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்குப் பொறுப்புடமையைப் பேணி வருதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் துல்லியமான அதிகாரத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், பதியப்பட்டுள்ள சொத்துக்களுக்கான கணக்குப் பொறுப்புடைமை காணப்படுகின்ற சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதிகளில் ஒப்பிடுதல் மற்றும் வித்தியாசங்கள் காணப்படின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்றவற்றுக்காக நியாயமான உறுதிபாட்டினை பெற்றுக்கொள்வதற்குப் போதிய "சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்று நிறுவனத்தினால் பேணப்படுவது அவசியமாகும்.

1.4.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைந்தொழுகாமை.

உரிய நியமத்திற்கான தொடர்புடன் அமைந்தொழுகாமை	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(அ) பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற நிலையான சொத்துக்கள் பற்றிய விவரமான அட்டவணையின் பிரகாரம் கட்டிடங்களின் கீழ் வருடத்தில் பதிவழிக்கப்பட்ட/கழிக்கப்பட்ட பெறுமதி (disposal) ஆக 554,580 ரூபா காட்டப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் கட்டிடங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த 21,610,143 ரூபாவினுள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் சார்பாக செலவிடப்பட்ட 554,580 ரூபா தொகையும் உள்ளடக்கப்பட்டிருத்தல் மற்றும் அது	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட உரு மாதிரிகள்(Dummies) தவறுதலாக கட்டிடக் கணக்கில் 554,580/= ரூபாவாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் கட்டிடக் கணக்கிலிருந்து அகற்றி பேரேட்டு இலக்கம் 911 இன் கீழ் தளபாட உபகரண கணக்கிற்கு மாற்றப்பட்டது. அது கணக்குக் கூற்றுக்கள்	சொத்துக்களுக்கான மாற்றப்படுதல்கள் கணக்குகளில் சரியாக காட்டப்பட வேண்டும் என்பது

நடப்பு வருடத்தின் கட்டிடங்களிலிருந்து அகற்றப்பட்டு தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மாற்றப்பட்டிருந்தது. இதனை கட்டிடங்கள் பதிவழித்தலாக (disposal) நிதி கூற்றுக்களில் காட்டுவது சரியானதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.			சமர்ப்பிக்கப்படும் Excel மாதிரி அகற்றப்படுதலாக (disposal) முன்வைத்துள்ளது. கணக்கு முறைமையில் தவறு இடம்பெறவில்லை என்பதோடு கணக்குக் கூற்றுக்களை முன்வைத்ததன் தவறு என்பதால் மீண்டும் அவ்வாறு இடம்பெறாதிருக்க கணக்காளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.	
(ஆ) பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 02 (i) நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் சொத்துக்களுக்கான கொள்வனவுகளாக தொழில் அமைச்சினால் ஒப்படைக்கப்பட்ட 7,010,000 ரூபா கிரயத்துடன்கூடிய மருத்துவ உபகரணங்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்ததனால் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் பணம் வெளிச் செல்லல் அந்த அளவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இடம்பெற்றுள்ள தவறுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக எதிர்வரும் வருடத்தின் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கருத்திற் கொள்வதற்கு கணக்காளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.	நியமத்தின் பிரகாரம் நிதிப் பாய்ச்சல்லைத் தயாரிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது
(ii) நடப்பு வருடத்தில் திறன் மேம்பாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினால் 3,829,489 ரூபா வழங்கப்பட்டதாக மூலதன மீளளிப்பு(Capital	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	நிதிப் பாய்ச்சல் கூற்றில் 15,792,790 ரூபாவாக எடுக்கப்பட்டதாவது 2018 ஆம் ஆண்டில் திறைசேரி	நியமத்தின் பிரகாரம் நிதிப் பாய்ச்சலைத் தயாரிப்பதற்கு நிறுவனம்

Reimbursement) கணக்கில் காட்டப்பட்டிருந்தது. ஆயினும் நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் அப்பண கிடைப்பனவுகள் 15,792,970 ரூபாவாக காட்டப்பட்டிருப்பதன் மூலம் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் கிடைக்கப்பெற்ற நிதிப் பாய்ச்சல் 11,963,481 ரூபா அதிகமாக காட்டப்பட்டிருந்தது.			கிடைப்பனவுகள் 5,682,291 ரூபா மற்றும் 2019 ஆம் ஆண்டின் திறைசேரி கிடைப்பனவுகள் 21,454,998 ரூபா என்பவற்றுக்கிடையிலான வித்தியாசமாகும்.	நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது
(iii) மீளாய்வாண்டில் உண்மையாக பணத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் நிதி உட்பாய்வாக காட்டப்பட வேண்டும் என்ற போதிலும் நிறுவனத்தினால் நிதி செயலாற்றுகை கூற்றின்படி வருடத்திற்கான வட்டி வருமானம் நிதி உட்பாய்வாக காட்டப்பட்டிருந்தமையினால் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழான நிதிப் பாய்ச்சல் 209,156 ரூபாவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இடம்பெற்றுள்ள தவறுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக எதிர்வரும் வருடத்தின் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கருத்திற் கொள்வதற்கு கணக்காளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.	நியமத்தின் பிரகாரம் நிதிப் பாய்ச்சலைத் தயாரிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது
(iv) வருமானக் கூற்றின் பிரகாரம் வருடாந்த தேய்மானத்திற்கான செலவினம் 4,918,487 ரூபா என்றபோதிலும் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் நிதிப் பாய்ச்சலை தேடும்போது 5,083,486 ரூபா இலாபத்துடன் சேர்க்கப்பட்டதனால் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் நிதிப் பாய்ச்சல் 165,000 ரூபா கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இடம்பெற்றுள்ள தவறுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக எதிர்வரும் வருடத்தின் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களைத்	நியமத்தின் பிரகாரம் நிதிப் பாய்ச்சலைத் தயாரிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது

			தயாரிக்கும்போது கருத்திற் கொள்வதற்கு கணக்காளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.	
(இ) **<u>பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03</u>** 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்படும்போது வெளிக்கொணரப்பட்ட 3,021,272 ரூபா தவறு சரி செய்யப்படுதல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 46, 47 மற்றும் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைய பின்னோக்கியதாக சீராக்கல் செய்யப்பட்டு ஒப்பீட்டு ரீதியான புள்ளி விவரங்கள் (Restated comparative Figures) நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எதிர் வரும் காலத்தில் கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கும்போது கணக்கீட்டு நியமங்களுக்கு உட்பட்ட வகையில் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொண்டேன்.	நியமத்தின் பிரகாரம் தவறுகளை சரி செய்யும் போது தேவையான சமர்ப்பணங்களை மேற்கொள்வதற்காக நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது.

(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 (i) நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக தேய்மானம் அடைந்திருந்த கிரயம் 7,132,880 ரூபாவாகிய சொத்துக்கள் மேற்கொண்டும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ள சில உபகரணங்கள் பயன்படுத்தப்படாததனால் அகற்றப்பட்டுள்ளதோடு அந்த உபகரணங்கள் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பொருட் கணிப்பீட்டின் மூலம் 2020 ஜூன் மாதம் 30 ஆம் திகதி அகற்றப்பட்டுள்ளன. மேலும் பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் தொடர்பில் 2020 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கணக்குப் பிரிவுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்து தேய்மானம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது
(ii) பயன்படுத்தப்பட்ட காலப்பகுதிக்கு மட்டும் சொத்துக்கள் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் நிறுவனத்தினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படும் வருடத்திலும் விற்பனை செய்யப்படும் வருடத்திலும் முழுமையாக தேய்மானம் செய்யப்படும் அடிப்படையில் சொத்துக்கள் தேய்மானம் செய்யப்பட்டிருந்தன. ஆகையால் நடப்பு வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 6,692,704 ரூபா பெறுமதியான 15 சொத்து உருப்படிகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட தேய்மானங்கள் 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டு காட்டப்பட்டிருந்தபோதிலும் நிறுவனம் கணக்குகளைத் தயாரிக்கும்போது தேய்மானம்	நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்தும் காலத்தின் மீது அடிப்படையாக அமைந்து தேய்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு அதன்படி

மேலதிக தேய்மான செலவினம் 374,104 ரூபாவாக அமைந்திருந்தது.			செய்திருப்பது கொள்வனவு செய்யப்பட்ட வருடத்தில் முழு வருடத்திற்கான தேய்மானம் செய்யப்படுதல் தேய்மான கொள்கை காரணமாகவாகும். அது குறிப்பு 02 இன் கீழ் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது .	நிறுவனத்தின் தேய்மானம் பற்றிய கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பது.
(உ) நிறுவனமானது தற்போது ஜாவத்த பிரதேசத்தில் தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான 0.1840 ஹெக்டெயர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடமொன்றில் பேணப்பட்டு வருவதோடு கட்டிடத்தின் நவீனமயமாக்கும் பணிகளுக்காக 2019 டிசம்பர் 31 திகதிவரை நிறுவனத்தினால் 21,140,552 ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வரையிலும் சொத்தின் உரிமை நிறுவனத்திற்கு சாட்டிக்கொள்ளப்பட்டிருக்கவில்லையென்ற போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 87(9) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களுக்கான உரிமை நிறுவனத்திற்கு இல்லையென்பது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில்	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் அமைந்துள்ள கட்டிடம் நிறுவனத்தின் ஆரம்பத்திலிருந்து தொழில் திணைக்களத்தினால் மாதாந்த வாடகை அடிப்படையிலின்றி வழங்கப்பட்டுள்ளதோடு கட்டிடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அதன் சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு சேவைகளும் வழங்கப்படுகின்றன. எதிர்வரும் கணக்குக் கூற்றுக்களில் 07 ஆம் நியமத்தின் பிரகாரம்	நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது.

வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை .			கணக்குக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு குறித்துக் கொள்கின்றேன்.	

1.4.3 **<u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>**

கணக்காய்வவின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(அ) கடந்த வருடத்தில் நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் 103,054 ரூபா குறைவாக கணக்குப் பதியப்பட்டிருந்ததோடு அத் தொகையானது மீளாய்வு ஆண்டில் கடந்த வருடங்களுக்கான சீராக்கல்களாக முன்வைக்கப்படுவதற்குப் பதிலாக நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது. இதன் காரணமாக	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	தொடர்புடைய கணக்காய்வு விசாரணையுடன் உடன்படுவதோடு தவறுதலாக கணினி முறைமையில் தகவல்கள் இற்றைப்படுத்தப்படும் போது கடந்த வருடங்களுக்கான சீராக்கலாக குறிப்பிடப்பட வேண்டும் என்ற போதிலும் 2019 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்குப் பதியப்பட்டுள்ளது.	நிலையான வைப்புக்களுக்கான வட்டியை சரியாக கணக்கிட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும்.

இன்றைய தொழிற்பாட்டு இலாபம் இந்த அளவினால் அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது.			எதிர்வரும் வருடங்களில் கணக்குகள் ஒப்பிடப்படும் போது அவ்வாறு இடம்பெறாதிருப்பதற்கு பொறுப்பு பார்த்துக்கொள்ளுமாறு கணக்குப் பிரிவுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	
(ஆ) உரிமை மாற்றக் கூற்றில் கடந்த வருடங்களுக்கான சீராக்கல்களாக 479,867 ரூபா காட்டப்பட்டுள்ள போதிலும் கடந்த வருடங்களுக்கான சீராக்கல் கணக்கின் நிலுவை 590,833 ரூபாவாக இருந்தது. இதன்படி கடந்த வருடங்களுக்கான சீராக்கல் கணக்கு மற்றும் உரிமை மாற்றக் கூற்றில் உள்ளடங்கியுள்ள கடந்த வருடங்களுக்கான சீராக்கல்கள் என்பவற்றுக்கு இடையில் 110,966.45 ரூபாவிலான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள கடந்த வருடங்களுக்கான நிலுவை சீராக்கல் தொடர்பான உரிமை மாற்றக் கூற்று எதிர்வரும் காலத்தில் சரி செய்து சமர்ப்பிப்பதற்குக் குறித்துக் கொண்டுள்ளேன்.	கடந்த வருடங்களுக்கான சீராக்கல்கள் சரியாக உள்ளடக்கப்பட்டு உரிமை மாற்றக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.

1.5 **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

1.5.1 பெற வேண்டிய கணக்குகள்

கணக்காய்வவின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(அ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறுவனத்தின் கடனாளர் நிலுவை 9,265,761 ரூபாவாக காணப்பட்டதோடு கடனாளர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் அதில் 3,348,710 ரூபா 90 நாட்களுக்கு மேற்பட்ட கடனாளர் நிலுவைகள் காணப்பட்ட போதிலும் அத்தொகைகளை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	நிறுவனத்தின் கணக்கீட்டு மென்பொருள்(Quick Books) மூலம் கடனாளர் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் ஐந்தொகை அறிக்கையைப் பயன்படுத்தி Excell மென்பொருளின் நிதிக் கூற்றுக்களை ஒப்பிடும்போது தவறுதலாக 155,957/- ரூபா கடனாளிகள் மற்றும் அமைச்சிலிருந்து கிடைக்கப்பட வேண்டிய கணக்குகள் என்பவற்றுக்கு மத்தியில் மாறியதன் காரணமாக இத்தவறு இடம்பெற்றுள்ளது. ஆயினும், கணக்கீட்டு முறைமையில் மாற்றம் இல்லை எனவும் கணக்குகளை	கடனாளர் நிலுவை மற்றும் அமைச்சில் இருந்து கிடைக்கப் படவேண்டிய பணத்தை சரியான பெறுமதிக்கு நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

			முன்வைத்ததன் தவறாகவும் குறிப்பிட முடியும். இத் தொகைகள் கடனாளர் நிலுவையின் மொத்தத் தொகையில் மாற்றம் எதுவும் ஏற்படுத்தவில்லை என்பதை மேலதிகமாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.	
(ஆ) 2019 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் தொழில் அமைச்சிடமிருந்து கிடைக்கப்படவேண்டிய பணமாக நிதிக் கூற்றுக்களில் 7,623,444 ரூபா காட்டப்பட்டுள்ள போதிலும் தொழில் அமைச்சின் அத்தினத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப் பொறுப்பு 4,074,197 ரூபாவாக காட்டப்பட்டிருந்தது. இதனால் எஞ்சிய 3,549,247 ரூபா கிடைப்பனவுகள் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	நிறுவனத்தினால் திறைசேரி கிடைப்பனவுகள் 7,623,444 ரூபாவுக்கான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் தலைமையகத்தினால் இந்த நிறுவனம் சார்பாக அமைச்சின் கணக்குகளில் எஞ்சியிருந்த நிதி ஏற்பாடுகளின் மீது பட்டியல்களுக்கான பொறுப்பாக 4,074,197 ரூபா மட்டும் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சின் கணக்குப் பிரிவினால் தெரிவிக்கப்பட்டது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு நிறுவகம் திறைசேரிக்கு அறிக்கையிடுவதில்லை என்பதனை அறியத்தருகின்றேன்.	கிடைக்கப்பட வேண்டிய பணத்தின் உண்மையான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். தொடர்புடைய மற்றத் தரப்புடன் உடன்பாட்டுக்கு வருகை தந்து கணக்குகளில் கிடைக்கப்பட வேண்டிய தொகைகள் உள்ளடக்கப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் மாற்றங்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்

1.6 **சட்டதிட்டங்களும் ஒழுங்குவிதிகளும்**

சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகளுக்கான தொடர்பு	அமைந்தொழுகாமை	புதிய அவதானிப்பா/ நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(அ) 2018 ஜூலை 18 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் I (ஆ) மற்றும் II ஆம் பிரிவுகள்	(i) நிறுவனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளை அதிகரித்தல ஆனது பொதுத் திறைசேரியின் முன்கூட்டிய அங்கீகாரம் மற்றும் விதப்புரைகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும் அத்தகைய அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை மட்டும் பெற்றுக்கொண்டு 369,894 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தது.			நிறுவனத்தினால் வார இறுதியில் நடத்தப்படுகின்ற டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளின் மூலம் 2019 ஆம் ஆண்டில் வருடாந்த வருமானமாக 18 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருமானத்தை ஈட்டும் போது பதவி அணியினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தமது கடமைகளுக்கு அப்பால் சென்று பணியாற்றியுள்ளனர். மேலதிகமாக மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் தொடர்பில் அவர்களை ஊக்குவிக்கும்	கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

				நோக்கத்துடன் பணிப்பாளர் சபைக்கு ஆற்றுப்படுத்தி தேறிய வருமானத்தை கருத்திற்கொண்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக தொழில் அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதோடு எதிர்வரும் சில தினங்களில் அமைச்சின் அவதானிப்புகள் வழங்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட அங்கீகாரம் கிடைக்கப்படும் என எதிர்பார்க்கின்றேன். தற்போது கணக்காய்வின் அவதானிப்புகளின் பிரகாரம் கணக்காய்வுத் திகதியிலிருந்து அனைத்து கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.	
	(ii) நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற பாட நெறிகளில் பங்கேற்கின்ற வளவாளர்களுக்கு			தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற சான்றிதழ் மற்றும்	கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம்

	கொடுப்பனவுகளை செலுத்தும்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகளை விஞ்சிச் சென்று மீளாய்வு ஆண்டில் 1,022,750 ரூபா வளவாளர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப் பட்டிருந்தன.			டிப்ளோமா பாடநெறிகளின் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானம் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதற்கான காரணம் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மை யாளர்கள் அதாவது,(மருத்துவர்கள், பொறியியலாளர்கள்) போன்றவர்கள் இப்பாடநெறிகளின் விரிவுரையாளர்களாக ஈடுபடுத்தப்படுவதாகும். மேலும், ஏனைய நிறுவனங்களில் செலுத்தப்படுகின்ற தொகையைவிட குறைந்த தொகையே இன்றளவிலும் செலுத்தப்படுவதோடு பாடநெறிகளின் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானம் 17 மில்லியன் ரூபா(2018 ஆம் ஆண்டில்) அளவாக உள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இது தொடர்பில் ஏற்கனவே விடயங்களை ஆராய்ந்து கடித இலக்கம் DMS/1568 மூலம் தொழில் அமைச்சின்	பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

				அவதானிப்பினைக் கோரியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.	

2. **நிதிசார் மீளாய்வு**

2.1. **நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு 28,130,642 ரூபாவிலான மிகையொன்றாக காணப்பட்டதோடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது 21,506,251 ரூபாவாக அமைந்திருந்தது. அதன் பிரகாரம் நிதிசார் விளைவில் 6,624,391 ரூபா வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் 12,994,110 ரூபாவினால் அதிகரித்திருந்தமையானது இந்த வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருந்தது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **பெறுகை முகாமைத்துவம்**

கணக்காய்வவின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(அ) 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் குருதி மாதிரிகளைப் பரிசோதிப்பதற்காக தனியார் நிறுவனமொன்று	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	2014 ஆம் ஆண்டு தொடக்கம் குறிப்பிட்ட நிறுவனத்தின் மூலம் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதுடன் உடன்படுகின்றேன்.	பெறுகை செயற்பாடுகளின் போது இயன்றளவு பெறுகை வழிகாட்டல்களில் துல்லியமாக குறிப்பிடப்பட்டுள்ள

தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6.1 இன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டு ஆறு மாதங்கள் கடப்பதற்கு முன்னர் மட்டும் மீண்டும் ஆடர் செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றபோதிலும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை 5 வருடங்கள் தொடர்ச்சியாக இந்த நிறுவனத்தின் மூலம் மட்டும் குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 3 வகை பரிசோதனைகளுக்கான கட்டணத்தை 300 ரூபா வீதம் அதிகரிப்பதற்கும் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.			ஆயினும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்படும் விலைகளுடன் ஒப்பிடுகையில் இந்த நிறுவனத்தினால் அறவிடப்படும் தொகை மிகக் குறைவாகும். மேலும் கடந்த சில வருடங்களில் 300 ரூபாவினால் மட்டுமே விலையை அதிகரித்துள்ளது.மேலும் குருதி மாதிரிகளை பெற்றுக்கொள்வதற்காக இந்த நிறுவனத்தைச் சேர்ந்த தேர்ச்சி பெற்ற பெண் அலுவலர் ஒருவர் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு வருகை தருவதோடு அதற்காக மேலதிக கட்டணம் அறவிடப் படுவதில்லை என்ற விடயமும் இந்த நிறுவனத்திலிருந்து தொடர்ச்சியாக சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு காரணமாக அமைந்தது.	அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக பணியாற்ற வேண்டும் என்பது.

3.2 **மனிதவள முகாமைத்துவம்**

கணக்காய்வின் அவதானிப்பு	புதிய அவதானிப்பா / நடப்பிலுள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்துக்களை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை
(அ) அரச துறையில் மனித வள அபிவிருத்தி என்ற தலைப்பில் 2018 ஜனவரி 24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தித் தொடர்பில் பல்வேறுபட்ட துறைகளில் பயிற்சித் தேவைகள் இனங்காணப்பட்டு பயிற்சிகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைவாகவே விடயங்களை உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்ளப்படுகின்றது.	பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் பிரகாரம் மனிதவள முகாமைத்துவத்திற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பது.
(ஆ) 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய நிறுவகச் சட்டத்தின் 9(ii) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்திறன் மற்றும்	புதிய அவதானிப்பாகும்	முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்	தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர்களின் எண்ணிக்கை கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு அங்கீகரித்துக்கொள்ளப்பட்டதோடு நிறுவகத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டு அப் பதவிகளில் இணைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறுவகத்தை செயற்திறன்மிக்க வகையிலும் பயன்மிக்க வகையிலும் பேணிச் செல்வதற்குத் தேவையான உத்தியோகத்தர்களை சேவையில் இணைக்க வேண்டும் என்பது.

நிர்வாகம் என்பவற்றுக்குத் தேவையான வகையில் நிறுவகத்தின் பணிப்பாளர்களாக சில எண்ணிக்கையிலான நபர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் 06 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் நிறுவகத்தின் பணிப்பாளர் ஒருவர் செயலாளராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் காட்டப்பட்டுள்ள போதிலும் நிறுவனத்தின் 07 அதி உயர் பதவிகளுக்குரிய 06 பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன.				

ரீ.ஜீ.ஐ. பத்மினி
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக